# நிலா

இருமாத இதழ்
இலவச வெளியீடு
5000 பிரதிகள்

தை - மாசி 2017 | சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு | இல. 43

## பிரான்சின் 11வது அதிபர் தேர்தல்
## களமிறங்கும் வேட்பாளர்கள்!

பிரான்சின் 5வது குடியரசின் 11வது அதிபர் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் 23 மற்றும் மே 07ல் நடைபெறவுள்ளன. தேர்தலுக்கு இன்னும் மூன்று மாத காலமே இருக்கும் நிலையில் பெரும் பகுதி வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டு விட்டனர்.

சோசலிசக் கட்சி தனது முதற் சுற்றில் தீவிரமாகவுள்ளது. ஜனவரி 29ம் திகதிக்குப் பின்னர் சோசலிசக் கட்சி வேட்பாளரும் எமக்குத் தெரிந்துவிடும். ஐந்தாவது குடியரசில் முதல் முறையாக ஒரு நடப்பு அதிபர் தனது இரண்டாவது ஆட்சிக்கால வேட்பாளராக களமிறங்கவில்லை.

தற்போதைய நிலையில் அங்கீகரிக்கப்பட்ட வேட்பாளர்களாக பட்டியலிடப்பட்டுள்ளவர்கள் :



Lutte Ouvrière - **Nathalie Arthaud** :

தீவிர இடதுசாரிக் கட்சியின் ஆதரவில் களமிறக்கப்பட்டுள்ளார். 2012 தேர்தலில் 0,56% வாக்குகள் பெற்றவர்.



Nouveau Parti Anticapitaliste - **Philippe Poutou** :

தீவிர இடதுசாரிக் கட்சியின் ஆதரவு. 2012 தேர்தலில் 1,15% வாக்குகள் பெற்றவர்.



Gauche Radicale - **Jean Luc Mélenchon** : தீவிர இடதுசாரிக் கட்சியின் முக்கிய ஆளுமை Front de gauche வேட்பாளராக 2012ல் போட்டியிட்டு முதல் சுற்றில் 11,1% வாக்குகள் பெற்றிருந்தார். தீவிர இடது சாரிகள் மற்றும் கொம்யுனிஸ் கட்சிகளின் முக்கிய நம்பிக்கையும் இவரே. தனது தீவிர பேச்சுத் திறமையால் தொடர்ந்து தேர்தல் பிரச்சாரங்களில் முன்னணி வகித்து வருகின்றார்.



Europe Écologie Les Verts - **Yannick Jadot**

Nicolas Hulot வேட்பாளர் பட்டியலில் இருந்து விலக, பசுமைக் கட்சியினரால் நடாத்தப்பட்ட முதற் சுற்றில் Cécile Duflot, Karima Delli மற்றும் Michéle Rivasi ஆகியோரைப் பின்தள்ளி வேட்பாளராக களமிறங்குகின்றார்.

En Marche! - **Emmanuel Macron** பெரிதும் எதிர்பார்க்கப்படும் புதிய வருகை. முன்னாள் பொருளாதாரத்துறை அமைச்சர். இடது

...தொடர்ச்சி2ம் பக்கம்..



## உலகின் சிறந்த ஆசிரியர் விருது

முதல் முறையாக பிரான்சைச் சேர்ந்த ஒரு ஆசிரியர் இவ்விருதுக்காகத் தெரிவாகியுள்ளார். உலகமெங்குமிருந்து 20 ஆயிரம் ஆசிரியர்கள் பங்குபற்றும் இத்தெரிவில் முதல் 50 பேருக்குள் இடம்பிடித்து பிரான்சைச் சேர்ந்த ஆசிரியை Marie-Hélène Fasquel-Erhart பிரான்சிற்குப் பெருமை சேர்த்துள்ளார்.

பிரான்சின் மேற்கே அமைந்துள்ள Nantes நகரில் நெல்சன் மண்டேலா லிசேயில் ஆங்கில ஆசிரியராக பணியாற்றிவரும் Marie Hélène தனது சிறுவயது ஆசிரியர் கனவை தனது 18 வயதில் சாத்தியமாக்கினார். இன்று 45 வயதாகும் ஆசிரியரின் நிபுணத்துவம் அமெரிக்க இலக்கியமாகும்.

இவ்விருது ஒரு ஆசிரியர் தனது கற்பிதங்களை ஒரு மாணவனுக்கு எவ்வாறு கடத்துகின்றார், எவ்விதமான புதிய கற்பித முறைகளை நடைமுறைப்படுத்துகின்றார் போன்ற தகைமைகளை அடிப்படையாகக் கொண்டே கணிக்கப்படுகின்றது.

Marie-Hélène Fasquel-Erhart ன் தனித்துவம் என்றால்

...தொடர்ச்சி2ம் பக்கம்..

நிலா
www.nilafrance.com
தொடர்புகளுக்கு : சங்கீதா அச்சகம்
Tél.: 01 44 72 08 94 sangeethafrance@gmail.com

...1ம் பக்கத் தொடர்ச்சி..



களின் முதற் சுற்றில் போட்டியிடக் கோரி சோசலிசக் கட்சியின ரால் முன்வைக்கப் பட்ட கோரிக்கையை நிராகரித்து தனித்துக் களமிறங்குகின்றார். நான் இடதுசாரி யும் அல்ல வலது சாரியும் அல்ல எனக்கூறி இடது சாரிக் கட்சிகளின் வாக்காளர்களையும், தனது Anti-systéme கருத்துக்களினால் வலது முன்னணி வாக்காளர்களையும் கவர்ந்து அனைத்து கட்சிகளினதும் தீவிர கவனத்திற்கு உள்ளாகி வருகின்றார்.

Mouvement Démocrate - **François Bayrou**



பிரான்சின் மூன்று அதிபர் தேர்தல்களில் போட்டியிட்ட வேட்பாளர். 2002 (6, 84%) 2007 (18, 57%) 2012 (9, 13%). ஆரம்பத்தில் Alain Juppéக்கு ஆதரவு எனத் தெரிவித்திருந்தார். Juppé முதற் சுற்றில் வெற்றியீட்டாத காரணத்தால் தானே நேராகக் களமிறங்கியுள்ளார்.

Emmanuel Macron மற்றும் François Fillon ஆகியோரைத் தொடர்ந்து விமர்சித்து வருகின்றார்.

Les Républicains மற்றும் சார்புக் கட்சிகள்

**François Fillon** : முன்னாள் பிரதம



ரான Fillon, நிக்கொலா சார்க்கோசி, Alain Juppé எனப் பெரும் வலது சாரிய ஆளுமைகளைப் பின்தள்ளி வேட்பாளராக களமிறங்குகிறார். வலது சாரிக் கட்சிகளின் முக்கிய நம்பிக்கை. கருத்துக் கணிப்புகளும் இரண்டாவது சுற்றுக்கு நிச்சயம் செல்வார் என ஆரூடம் கூறுகின்றன. இவரைத் தவிர சார்புக் கட்சிகள் சார்பில் முதற் சுற்றில் போட்டியிடாமல் நேர–



டியாகப் போட்டியில் இறங்கவுள்ளதாக **Jean Pierre Gorges** -பாராளுமன்ற உறுப்பினர்.

**Henri Guaino** - பாராளுமன்ற உறுப்பினர். மற்றும் Drancy நகரபிதாவும் Seine Saint Denis



பாராளுமன்ற உறுப்பினருமான **Jean - Christophe Lagarde** ம் தமது விருப்பைத் தெரிவித்துள்ளார்கள்.

Debout la France.



**Nicolas Dupont - Aignan.** Debout la France கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாவர். 2012 தேர்தலில் போட்டியிட்டு 1, 79% வாக்குகள் பெற்றிருந்தார்.

Front National - **Marine Le Pen** வலது



முன்னணிக் கட்சியின் அசைக்க முடியாத தலைவி. ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர். அதிபர் தேர்தலின் முக்கிய வேட்பாளர். 2012 தேர்தலில் 17, 90% வாக்குகள் பெற்றிருந்தார். இம்முறை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறுவார் என்பது அரசியல் அவதானிகளின் கணிப்பாகவுள்ளது. தற்போதைய ஆட்சி, பிரான்சின் பொருளாதாரம், பாதுகாப்பு, அகதிகள் குடியேற்றம் என விரக்தியில் இருக்கும் மக்களை தனது பக்கம் இழுக்க தீவிரமாக இயங்கி வருகிறார்.

Solidarité et Progrés -



**Jacques Cheminade** கட்சியின் நிறுவுனரும் தலைவருமான Jacques Cheminade 1995 (0, 28%) 2012 (0, 25%) பிரான்ஸ் அதிபர் தேர்தலில் போட்டியிட்டுள்ளார்.

Nouvelle France -



**Michéle Alliot - Marie** நீண்டகால அரசியற் செயற்பாட்டாளர், பாதுகாப்புத்துறை, உட்துறை வெளி நாட்டு விவகாரத் துறை, நீதித்துறை எனப் பலதுறைகளில் அமைச்சராக ஜக் சிராக் மற்றும் நிக்கொலா சார்கோசியின் ஆட்சிகளில் பங்கேற்றவர். தற்போது ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பின ராகச் செயற்பட்டு வருகின்றார்.

இவர்களைவிட இன்னும் 40இற்கும் அதிகமான அரசியல், கலை மற்றும் பல துறைகளைச் சேர்ந்த பிரபலங்கள் தாமும் வேட்பாளர்கள் என அறிவித்துள்ளனர். இருப்பினும் இவர்கள் தேர்தலில் பங்குபற்றுவது மிகவும் கடினமான விடயமாகவே இருக்கும். இவர்களுக்கு சார்பாக பெற வேண்டிய 500 கையொப்பங்கள் கிடைக்காத பட்சத்தில் இவர்களால் தேர்தலில் போட்டியிட முடியாது.

18ம் பக்கம் பார்க்க..

...1ம் பக்கத் தொடர்ச்சி..



«Classe inversée» முறையாகும். பாடங்களை வீட்டில் தான் படிக்க வேண்டும். வகுப்பறையில் அந்தப் பாடம் தொடர்பான விவாதங்கள், சிந்தனை முறைகள், இன்னும் நவீன தொழில் நுட்பத்தினூடான செயல் முறைகள் குறிப்பாக Skype மூலம் அமெரிக்க எழுத்தாளருடனான கேள்வி நேரம் என முற்றிலும் புதிய அணுகு முறைகளைக் கையாள்வன ஆகும்.

Marie Hélène 2013ல் சூழல் பாதுகாப்புத் தொடர்பான ஒரு திட்டத்திற்காக தேசிய மட்டத்திலான ஒரு விருதும், 2014ல் Microsoft இனரால் நடாத்தப்படும் புதிய கற்பித முறைகள் தொடர்பான சர்வதேச அளவிலான விருதும் வென்றுள்ளார்.

அடுத்த கட்டத் தெரிவு பெப்ரவரி மாதத்தில் நடாத்தப்பட்டு 10 ஆசிரியர்கள் இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகி வெற்றியாளர்கள் மார்ச் 19ம் திகதி துபாயில் நடைபெறவிருக்கும் சர்வதேச கல்வி சார் கருத்துக்கள நிகழ்வில் அறிவிக்கப்படுவர்.

வெற்றியாளருக்கு 1 மில்லியன் டொலர்கள் கிடைக்கப்பெறும். நான் வெற்றியீட்டினால் எனக்குக் கிடைக்கும் பரிசில் பெருந்தொகையை பிரான்சில் எமது கல்வி முறைகளிலிருந்து வெளியேறும் மாணவர்களை மீண்டும் பாடசாலைகளுக்குக் கொண்டுவருவதற் கான புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் செலவு செய்வேன் என ஆசிரிய கடமையுணர்வை வெளிப்படுத்தியுள்ளார். ●

சங்கீதா அச்சகம்
39, Bd. de la Chapelle
75010 Paris
M°: La Chapelle
sangeethafrance@gmail.com
Tél. / Fax :
01.44.72.08.94




# இலவச போக்குவரத்து இனி இல்லை!

பாரிசில் சூழல் மாசடைவு உச்சநிலையை எட்டும் காலப்பகுதியில் இலவச பொதுப் போக்குவரத்து சேவை வழங்கப்பட்டுவந்தது. இது மிக செலவு கூடிய திட்டமாக இருப்பதால் உடனடியாக இதனைக் கைவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. சூழல் மாசடைவுக்குப் பிரதான காரணியான வாகனப் போக்குவரத்தை மட்டுப்படுத்துவதற்காகவே இந்த இலவசத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால் இந்தத் திட்டத்தால் ஒரு நாளைக்கு நான்கு மில்லியன் யூரோக்கள் நட்டம் ஏற்படுவதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

2017இலும் இது தொடர அனுமதிக்க முடியாது எனக் குறிப்பிட்டுள்ள போக்குவரத்துத்துறை "ஒரு நாள் பாஸ்" திட்டத்தைக் கொண்டுவரவுள்ளது. 3.80யூரோ உடைய ஒரு பாஸைப் பெற்றுக்கொண்டால் நாள் முழுவதும் அதைப் பயன்படுத்திப் பயணிக்கலாம் என்ற திட்டத்தை முன்வைத்துள்ளது.

சூழல் மாசடைவதைத் தடுப்பதற்காக பாரிஸ் கடுமையாக முயற்சித்து வருகின்றது. முக்கியமாக பாரிசுக்குள் ஓடும் வாகனங்கள் அனைத்தும் சூழலை மாசுபடுத்தும் அளவைக் காட்டும் ஸ்ரிக்கர்கள் ஒட்டியிருக்கவேண்டும் என்பது ஜனவரி நடுப்பகுதியுடன் கட்டாயமாகியுள்ளது.




பிரான்சின் தேசிய தொடரி நிறுவனமான SNCF புதிய சலுகை ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. 79 யூரோக்களுடன் ஒரு மாதம் முழுவதும் அதிவேக TGV தொடரிகளில் பயணிக்கும் வகையில் இளையோருக்கான புதிய அனுமதி அட்டையைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

'Happy Card' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த அட்டையை 16 – 27 வயதுடையோர் பெற்றுக்கொள்ளலாம். ஜனவரி 19ஆம் திகதியிலிருந்து 'Happy Card' நடைமுறைக்கு வந்துள்ளது.

இந்த அட்டையை நீங்கள் இணையத்தில் பதிவு செய்து பெற்றுக்கொள்ள வேண்டும். அதைவிட குறைந்தது மூன்று மாதங்களுக்குப் பதிவு செய்யவேண்டும். அதிவேக TGV மற்றும் நகரின் உட் பகுதிக்குள் சேவையில் ஈடுபடும் தொடரிகளுக்கும் இதனைப் பயன்படுத்தலாம்.

தொடரிப் போக்குவரத்துக்கு மக்கள் அதிகம் செலவு செய்ய வேண்டிய நாடுகளில் ஐரோப்பாவைப் பொறுத்த வரையில் சுவிஸ் முதலிடத்திலும் பிரான்ஸ் 5வது இடத்திலும் உள்ளது.

## Gare de l'Est - CDG

### ● அதிவேக புகையிரத சேவை

பாரிசுக்கும் சார்ள்ஸ் து கோல் விமான நிலையத்துக்கும் இடையே அதிவேக புகையிரத சேவை ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வழமையை விட 20 நிமிடங்களைச் சேமிக்கக்கூடிய இந்த சேவைக்கு பாராளுமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. 2023இல் சேவை ஆரம்பமாகும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது.

2024இல் ஒலிம்பிக் விளையாட்டை எங்கு நடாத்துவது என்ற வாக்கெடுப்பில் பாரீஸ் வெற்றியீட்ட இந்த சேவை மிகவும் உதவும் என்பதும் இதன் ஒரு நோக்கமாகக் கருதப்படுகின்றது. Gare de l'Est நிலையத்திலிருந்து விமான நிலையத்திற்கு நேரடி அதி வேக சேவையாக இது அமையவுள்ளது.

### ● சனத்தொகை கூடிய நகரம் - துலூஸ்




Pink City என அழைக்கப்படும் பிரான்சின் துலூஸ் நகரமே ஏனைய நகரங்களுடன் ஒப்பிடும் போது சனத்தொகையில் வேகமாக வளர்ந்துவரும் நகரமாகப் பதிவாகியுள்ளது. சனத்தொகை செறிந்த நகரங்களில் பாரிஸ், மார்சே, லியோன் ஆகிய நகரங்களுக்கு அடுத்து 4வது இடத்தில் துலூஸ் தற்போது உள்ளது.

### ● மேம்படுத்தப்படும் பொதுப்போக்குவரத்து



கடந்த ஒக்ரோபர் மாதம் பாரிசின் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தும் மக்களிடம் அதனை மேம்படுத்துவதற்கான கருத்துக்கள் கோரப்பட்டிருந்தன. முக்கியமாக தொழில்நுட்ப ரீதியாகவும் சேவையில் ஈடுபடுவோர் தொடர்பிலும் ஆரோக்கியம் சார்ந்தும் மாற்றங்கள் கோரப்பட்டிருந்தன. முன்வைக்கப்பட்ட கிட்டத்தட்ட 15 மாற்றங்களுள் அதிக வாக்குப் பெறும் முதல் மூன்று மாற்றங்கள் அமுல்ப்படுத்தப்படவுள்ளன. RATP offline APP அறிமுகம் செய்தல், காற்றுத் தூய்மையாக்கிகள் நிறுவப்படுதல், வீதிச் சித்திரங்களை (Street Art) காட்சிப்படுத்துதல் போன்றவை அவற்றுள் அடங்குகின்றன.



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு



# பிரான்ஸ் பல்கலைக் கழகங்களில் ஏவ்வாறு பிழைத்துக்கொள்ளலாம்?

பாடசாலைக் கல்வியை முடித்து பல்கலைக் கழகத்திற்குள் நுழையும் மாணவர்கள் அல்லது வெளிநாடுகளில் இருந்து கல்வியைத் தொடரவரும் மாணவர்கள் பல்கலைக்கழக சூழலுக்குப் பழகிக்கொள்வது கடினமானதாக இருப்பது வழமையே. முன் ஆயத்தங்களோடு பல்கலைக்கழக சூழலை முதலே தெரிந்துகொண்டு செல்வது அந்தப் பயத்தைக் குறைக்கும் என்பதால் *Erasmus (European Region Action Scheme for the Mobility of University Students)* சில குறிப்புக்களை வழங்கியுள்ளது.

- பாடசாலை நிர்வாகத்தைப் பொறுத்த வரை அவர்கள் உங்களோடு நெருக்கமான உறவைப் பேணியிருப்பார்கள். ஆனால் பல்கலைக்கழக நிர்வாகம் அவ்வாறில்லை. பல்கலைக்கழக அலுவலகம், நிர்வாகத்துடன் பொறுமையாக இருங்கள். அவர்களே அனைத்திற்கும் உதவ வேண்டும் என ஒரு போதும் நினைக்காதீர்கள். நீங்களாகவே எல்லாவற்றையும் அறிந்து தன்னிச்சையாக சுயாதீனமாகச் செயற்பட வேண்டுமென அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

- பிரான்சில் Bac முடித்த எவரும் பல்கலைக்கழகம் போகலாம். எனவே வகுப்பறைகள் நிறைந்தே இருக்கும். ஆசிரியர்களால் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படமாட்டாது.

- நிர்வாகம் மெதுவாகவே செயற்படும். ஆகவே அதிக வேலைகளை உங்கள் நேரத்திற்கு நீங்களாகவே ஒழுங்குபடுத்த வேண்டும்.

- அலுவலகத்தினர் மற்றும் நிர்வாகத்தினர் மதிய உணவு ஓய்வு நேரத்தை நீண்டதாக எடுப்பது எரிச்சலூட்டலாம். ஆனால் உங்கள் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டுமாயின் காத்திருங்கள்.

- அதிகளவு பல்கலைக்கழகம் சார்ந்த சமூக வலைத்தள குழுக்களுடன் (Facebook groups) தொடர்பில் இருங்கள். தகவல்களைப் பரிமாறிக் கொள்ளுங்கள். வகுப்பு நேரங்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடானதாக இருக்கும். அவை குழப்பத்தை ஏற்படுத்தும் போது இந்தக் குழுக்கள் மூலமாக ஆலோசித்து முடிவெடுங்கள்.

- நீண்ட நேர வகுப்புக்கள் இடம்பெறுவது வழமையாக இருக்கும். மாலை 7 அல்லது 8மணி வரையும் கூட வகுப்புக்கள் தொடரும். அதே போன்று நீண்ட நேரப் பரீட்சைகளுக்கும் தயாராக இருக்க வேண்டும்.

- 1 தொடக்கம் 20 என்பதே புள்ளி வழங்கும் திட்டம். 10 என்பது பாஸ் மாக்ஸ் (தேர்ச்சிப் புள்ளி). 9 – 12 சாதாரண பெறுபேறாகக் கருதப்படும். அதை விட ஒப்படை வேலைகளின் புள்ளிகள் உங்கள் இறுதிப் புள்ளியில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும். ஆகவே ஒப்படைகள், நாளாந்த செய்முறைகளில் கவனம் செலுத்துங்கள்.

- அதிக நண்பர்களைப் பெற்றுக்கொள்ளுங்கள். படிப்புச் சுமை மன அழுத்தத்தை உருவாக்கலாம். அதைப் போக்க விளையாட்டு, பொழுதுபோக்கு போன்ற வெளிச் செயற்பாடுகளிலும் முக்கிய கவனம் செலுத்துங்கள்.




**உங்கள் பார்வையின் கோணமே உங்கள் வாழ்வை தீர்மானிக்கிறது.**



## பிரான்ஸ் அதிபரின் வாழ்த்து அட்டைகள்...

வருடா வருடம் பிரான்ஸ் அதிபரின் அலுவலகமான Elysée அதிகாரபூர்வ வாழ்த்து அட்டைகள் அனுப்புவது வழக்கம். அதிபரின் நேரடிக் கையொப்பத்தில் அனுப்பப்படும் இவ் வாழ்த்து அட்டைகள் அரச அச்சகங்களில் அச்சிடப்படுவதே வழக்கமாகும். இவ்வருடம் வழக்கத்திற்கு மாறாக வாழ்த்து அட்டைகள் Dammartin -en-Goële ல் அமைந்துள்ள Michel Catalano அச்சகத்தில் அச்சாகியுள்ளன.

இவ் அச்சகத்தில் தான் 2015ல் இடம்பெற்ற Charlie Hebdo தாக்குதலையடுத்து தீவிரவாதிகளான Kouachi சகோதரர்கள் தஞ்சம் புகுந்திருந்தனர். அங்கு பாதுகாப்புப் படையினருக்கும் தீவிரவாதிகளுக்குமிடையிலான மோதலில் அச்சகம் முற்றிலுமாக சேதமடைந்தது. அரச மற்றும் பொது அமைப்புகளின் உதவிகளுடன் நீண்ட 18 மாத மீளமைப்புகளுக்குப் பின்னர் அச்சகம் 29 செப்டெம்பர் 2016ல் அதிபர் பிரான்சுவா ஹொலந்தினால் திறந்து வைக்கப்பட்டது. அச்சகத்தின் மீள் வளர்ச்சியில் ஒரு சிறு உதவியாகவே வாழ்த்து அட்டை அச்சாக்க பொறுப்பு வழங்கப்பட்டதாக அதிபர் பிரான்சுவா ஹொலந்த் தெரிவித்துள்ளார். அச்சகத்தினரும் மிக நேர்த்தியான வாழ்த்து அட்டைகளை மிகக்குறைவான நேரத்தில் அச்சிட்டுக் கொடுத்து தமது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துள்ளனர்.
Elysée யின் அதிகாரபூர்வ வாழ்த்து அட்டைகள் அச்சிட்டு வழங்கியவர்கள் என்ற பெருமை எமது அச்சகத்தின் வளர்ச்சியில் மிகவும் உறுதுணையாக இருக்கும் என அச்சகத்தினர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

தாக்குதல் தருணத்தில் பணயக் கைதிகளாக பிடிபட்டிருந்த அச்சக உரிமையாளர் Michel Catalanoக்கும் அங்கு பணிபுரிந்த வரை கலைஞரான Lilian Lepère க்கும் அதிபர் Légion d'honneur விருது வழங்கிக் கௌரவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சிரியாவின் அலெப் நகரம்!



**சிரியாவில்** கட்டவிழ்த்துவிடப்பட்ட உள்நாட்டுப் போர் ஆரம்பமாகி ஆறு வருடங்கள் ஓடிவிட்டன. இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டும், பல இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக்கப்பட்டும் சொந்த நாட்டிலும் ஐரோப்பிய வீதிகளெங்கும் குளிரிலும் மழையிலும் அலைந்து திரிகின்றனர்.

சிரிய நகரங்கள் பல அரச படைகளாலும், கிளர்ச்சியாளர்களாலும் Daech குழுக்களாலும் இன்னும் சர்வதேச கூட்டமைப்புகளாலும் தாக்குதல்களுக்குள்ளாகி சின்னா பின்னமாகிக் கிடக்கின்றன. இந்நகரங்களுள் அதிகம் பேரிழப்பைச் சந்தித்துள்ள நகரமென்றால் அது Alep நகரம்தான்.

கடந்த ஐந்து வருடங்களாக கிளர்ச்சியாளர்கள் மற்றும் Daech ன் கட்டுப்பாட்டிலிருந்த Alep நகரம் இன்று விடுவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு நகரம் கொடுத்த விலை அதிகம். தன்னையே முற்றாக அழித்துள்ளது. Alep நகர மக்கள் மனிதக்கேடயங்களாக தடுத்து நிறுத்தப்பட்டனர். சிரிய அரசினதும், ரஸ்ய விமானங்களினதும் குண்டு வீச்சுகளில் கொத்துக்கொத்தாக கொன்றொழிக்கப்பட்டனர். எத்தகைய குண்டுகள் வீசப்பட வேண்டும் என்பதில் பாரபட்சம் காட்டப்படவில்லை. பரீட்சார்த்த புதிய வகைக் குண்டுகள் முதல் இரசாயன குண்டுகள் வரை அனைத்தும் அனுமதிக்கப்பட சர்வதேசம் கண்ணை மூடிக்கொண்டே இருந்தது. குண்டுகள் நகரில் எதனையும் விட்டு வைக்கவில்லை. பல இலட்சம் மக்களைப் பலி எடுத்தது. வெறும் கொங்கிறீட் கல்லறையாக மட்டுமே நகரம் இன்று காட்சியளிக்கின்றது.

Alep நகரில் நடந்து கொண்டிருப்பது ஒரு இன அழிப்பே என பிரான்சின் பசுமைக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான Cécile Duflot தெரிவித்துள்ளார்.

அண்மையில் Alep மாநகரசபைத் தலைவரின் அழைப்பை ஏற்று பாராளுமன்ற உறுப்பினர்களான Patrick Mennuci (PS) Hervé Mariton (LR) உடன் Cécile Duflot வும் சிரியாவிற்குச் செல்ல முனைந்த போது எல்லையில் அனுமதி மறுக்கப்பட்டது. அதைத்தொடர்ந்தே தனது கோபத்தைப் பதிவு செய்துள்ளதுடன் பிரான்சையும் சர்வதேச நாடுகளையும் ஒரு முறையாவது நேரடியாகச் சென்று அங்கு என்ன நடைபெறுகின்றது எனப் பார்க்குமாறும் அழைப்பு விடுத்துள்ளார்.

நாங்கள் எல்லையில் தடுத்து நிறுத்தப்பட்ட போது Alep நகரின் மீது குளோரின் வாயு நிரம்பிய குண்டுகள் வீசப்பட்டன. ஒரு குண்டின் வீரியமே பல கிலோமீட்டர்களுக்கு மூச்செடுக்க முடியாமல் செய்யும். ஆனால் அங்கு வீசப்பட்டதோ மூன்று குண்டுகளாகும். குறிப்பாகச் சிறுவர்கள் குழந்தைகளின் சுவாசத் தொகுதியே பாதிப்புக்குள்ளாகும். இந்நிலையை ஒரு இன அழிப்பு என்று கூறாமல் என்னவென்பது? இத்தகைய அத்துமீறல்களை சர்வதேசம் அனுமதிக்கும் பட்சத்தில், நாம் எவ்விதமான பாடங்களையும் பயங்கரவாதத்திற்கு எதிராகக் கற்றுக்கொடுத்துவிட முடியாது. மேலும் Alep நகரை ஆதரிப்பதும் எமது எதிர்ப்பைப் பதிவு செய்வதும் எமது கடமையாகும் எனவும் தெரிவித்துள்ளார்.


இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

Le goût fraîcheur
OCEAN TROPICAL
Le Spécialiste des Fruits de Mer surgelés & Exotiques

# L'Ocean

பாரிஸ் மாநகரில் உங்களுக்காக நாம்

## Ocean Indian





குளிரூட்டப்பட்ட கடலுணவுகளின் தெரிவுகளுக்கு..

195, Rue de Fbg.St Denis - 75010 Paris
Tél: 01 42 09 31 50
Fax : 01 42 09 31 60

### Ocean Tropical

107, Avenue Pierre Sémard
95400 Villiers-le-Bel
Tél:01 39 94 04 00
Fax : 01 39 33 54 87



தரமான மளிகைப் பொருட்கள்
மற்றும்
மரக்கறி வகைகளுக்கு

### Ocean Tropical

46-48, Bld de Belleville-75020
Tél:01 46 36 11 97
Fax : 01 47 97 55 58



மலிவு விலையில்
தரமான பொருட்களின்
தெரிவுகளுக்கு

### Ocean De La Beauté

3, Avenue Alexis Varagne
95400 Villiers-le-Bel
Tél:01 39 94 04 00



உங்கள் அழகுக்கு
மேலும்
அழகு சேர்த்திட

வர்த்தகர்கள் எம்மிடம் மொத்தமாகவும்
பொருட்களை கொள்வனவு செய்துகொள்ளலாம்

## Exo Ocean

**Vente en gros et demi gros**




### L'Ocean Discount Super Marche

15-17, Rue Alexis Varagne
95400 Villiers Le Bel
Tél:01 39 90 80 79



உங்கள் வீட்டிற்குத்
தேவையான
அனைத்துப் பொருட்களின்
தெரிவுகளுக்கு...

LOD
Hyper Qualité & Prix Bas!

### Exo Ocean

7, Av. Alexis Varagne
95400 Villiers Le Bel
Tél: 01 34 19 46 97



மலிவு மற்றும்
தரமான பொருட்களின்
தெரிவுகளுக்கு...

29, Rue du Fer à Cheval, 95200 Sarcelles
Tél: 01 34 19 87 79 / Fax 01 39 33 69 21
email : exo-ocean@orange.fr



# உலகின் மிக நீளமான சுரங்கப்பாதை

உலகின் மிகநீளமான, நிலத்துக்குக் கீழான, தொடரிகளுக்கான, பாதை சுவிஸில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. சுவிஸின் சூரிச் நகரையும் இத்தாலியின் மிலன் நகரையும் இணைக்கும் பாதையில் அல்ப் மலைத் தொடரில் Saint-Gothard மலையைக் குடைந்து இந்நிலக்கீழ் தொடரிப்பாதை அமைக்கப்பட்டுள்ளது. 57 கிலோமீற்றர் நீளமான இப்பாதை 17 வருடகால கடின உழைப்பில் 11 மில்லியாட் யூரோ செலவில் அமைக்கப்பட்டுள்ளது. ஐரோப்பாவின் வட நாடுகளுக்கும் தென் நாடுகளுக்குமிடையிலான மிக முக்கியமான போக்குவரத்துப்பாதையாக Gotthard Base Tunnel வடிவமைக்கப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு பொருட்கள் ஏற்றிச் செல்லும் 200 தொடரிகளும் பயணிகளுக்கான 65 தொடரிகளும் பயணிக்கவுள்ளன. இந்நிலக்கீழ்ப்பாதையை தொடரிகள் 17 நிமிடங்களில் கடந்து செல்லும்.

Gotthard Base Tunnel ன் வருகையினால் இதுவரை காலமும் முதலிடத்திலிருந்து வந்த ஜப்பானின் Seikan நிலக்கீழ் பாதையும் (53.9 கிலோமீற்றர்) பிரான்சிற்கும் இங்கிலாந்திற்குமிடையில் கடலிற்குக்கீழான tunnel sous la manche பாதை யும் (50.5 கிலோமீற்றர்) பின்தள்ளப்பட்டுள்ளன.



# காந்தியையும் விட்டுவைக்காத அமெசோன்!

காலணிகள் வேண்டாம், ஆடம்பரம் வேண்டாம் என எளிமை யாக வாழ்ந்த இந்திய தேச பிதா மகாத்மா காந்தியையும் அமெசோன் விட்டு வைக்கவில்லை.

இன்று E–வர்த்தகத்தில் முன்னிலை வகிக்கும் அமெசோன் நிறுவனம் காந்திஅடிகளாரின் உருவப்படம் பதித்த செருப்புகளை விற்பனை செய்து வருகின்றது. இது மீண்டும் சர்ச்சைகளை கிளப்பியுள்ளது. அண்மையில் கனடா அமெசோன் இணைய விற்பனையில் இந்திய தேசியக்கொடிப் படம் வரைந்த செருப்புக்கள் விற்பனை செய்யப்பட்டு சர்ச்சைகள் கிளம்பின. பின்னர் இந்திய அரசே நேரடியா கத் தலையிட்டு விற்பனையை நிறுத்தியது. அத்துடன் அமெ சோன் நிறுவனம் மன்னிப்பும் கோரியிருந்தது.

இந்நிலையில் காந்திபடம் இடப்பட்ட செருப்பு அமெரிக்க இணையத்தில் 16 யூரோக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. மீண்டும் இந்திய அரசு தலையிட்டு இந்தியச் சின்னங்கள் மற்றும் தலைவர்களின் படங்களை பயன்படுத்துவதை அமெ சோன் தவிர்க்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டது. ஆனா லும் காந்தியின் படம் போட்ட செருப்புக்கள் தொடர்ந்தும் விற்பனையாகிக்கொண்டுதான் இருக்கின்றன.



## நான்காவது முறையாக தங்கப்பந்து வென்ற றொனால்டோ

31 வயதாகும் போர்த்துக்கலின் பெருமைக்குரிய வீரர் கிறிஸ்ரியானோ றொனால்டோ நான்காவது முறையாகத் தங்கப்பந்து Ballon d'or வென்றுள்ளார்.

தங்கப்பந்து விருது 1956ம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. ஆனாலும், 2007ம் ஆண்டுமுதல் இவ்விருது ஆர்ஜன்ரீன வீரர் லியோனல் மெசிக்கு அல்லது கிறிஸ்ரியானோ றொனால்டோவுக்கு மட்டுமே சொந்தம் என்றாகிவிட்டது. மற்றைய வீரர்கள் அனைவ ரையும் பின்தள்ளி தொடர்ந்து இவர்கள் இருவரின் ஆதிக்கமே தொடர்கிறது. ஒவ்வொரு வருடமும் மிகக்குறைந்தளவு புள்ளி வித்தி யாசத்திலேயே இருவருக்குமான வெற்றியும் மறைந்திருந்தது. ஆனால் இந்த வருடம் எந்தவித சர்ச்சைகளுமின்றி றொனால்டோ விருதை வென்றுள்ளார். இந்த வருடம் 'Real Madrid' கழகத்திற்காக Ligue des champions கிண்ண வெற்றி, போர்த்துக்கல்லுக்காக ஐரோப்பிய கிண்ண வெற்றி, மற்றும் 55 போட்டிகளில் 51 கோல்கள் என மிகவும் சிறப்பான ஆண்டாக அமைந்தது இவருக்கு. 60 வருடகால தங்கப்பந்து வரலாற்றில் லியோனல் மெசி இதுவரை 5 தங்கப்பந்துகளை வென்று முதலாவது இடத்திலிருந்து வருகின்றார்.






இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு



# உலகில் பிரெஞ்சு மொழி பேசுபவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு!

உலகில் அதிகம் பேசப்படும் மொழிகளின் வரிசையில் பிரெஞ்சு மொழிக்கு மூன்றாவது இடம். அதே வேளை உலகளாவிய, வணிக மற்றும் நிர்வாக துறைகளால் அதிகம் பயன்படுத்தப்படும் மொழிகளின், வரிசையிலும் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது. முதலாவது இடம் ஆங்கிலத்திற்கும், இரண்டாவது இடம் மன்டரினிற்கும் (சீனமக்களால் பேசப்படும் மொழி) கிடைத்துள்ளது.

பிரான்சின் கலாச்சார செல்வாக்கின் மூலமும் பொருளாதாரப் பலத்தினூடாகவுமே மொழியின் பிரகாசம் இத்தகைய இடத்தை எட்டியுள்ளது என INSEAD (Institut européen d'administration des affaires) தெரிவித்துள்ளது.

உலகில் தற்போது சராசரியாக 275 மில்லியன் பிரெஞ்சு மொழி பேசுபவர்கள் உள்ளனர். முன்னெப்போதையும் விட பிரெஞ்சு மொழி பேசுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்தே வருகின்றது. முக்கியமாக வட ஆபிரிக்க நாடுகளில் பிரெஞ்சு மொழி செல்வாக்கு அதிகரித்து வருவது ஒரு சிறந்த காரணமாகும். உலகெங்கும் இன்று பிரெஞ்சுமொழி பேசுவதென்பது பெருமையான கௌரவமாகப் பார்க்கப்படுகின்றது. ஆனால் இந்நிலை 2050 ஆம் ஆண்டில் மாறும் என ஆய்வாளர்களால் குறிப்பிடப்படுகின்றது. 2050ம் ஆண்டில் பிரெஞ்சு மொழியின் இடத்தை ஸ்பனியோல் பிடிக்கும் எனவும் தெரிவித்துள்ளனர். இன்று உலகில் அதிகம் கற்பிக்கப்படும் மொழிகளின் வரிசையில் பிரெஞ்சுக்கு இரண்டாவது இடமாகும். உலகெங்கும் 125 மில்லியன் மாணவர்கள். முதலாவது இடம், தொடர்ந்து ஆங்கிலத்திற்கே என்பதும் குறிப்பிடத்தக்கது.





பிரான்ஸ் தமிழ் பெண்கள் அமைப்பு நடாத்தும்

**வன்னி மயில் 2017**

தெரிவுப் போட்டி: 10.02.2017
11.02.2017, 12.02.2017
இறுதிப்போட்டி: 19.02.2017
ஞாயிறு காலை 8.30
*GYMNASE PIERRE SCOHY*
*1, Rue Aristide Briand*
*93600 Aulnay Sous Bois*







Tél (office) : 0033 148371675
www.trttamilolli.com


**மகாஜனா ப.மா.சங்கத்தின் புதிய நிர்வாகிகள் 2017 -18**

தலைவர் : திரு. சி. மனோகரன்
உபதலைவர் : திருமதி. ப. கருணைவேல்
திரு. உ. பரராஜசேகரன்
இணைச்செயலாளர் : திரு. சி. கண்ணன்
திரு. நா. வரதராஜா
பொருளாளர் : திரு. ச. சுதர்சன்

மேலும் பத்தொன்பதுபேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தெரிவாகியுள்ளனர். 08.01.2017 அன்று நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் இவர்கள் தெரிவாகினர்.

**'கபடமில்லாதவன் பாக்கியசாலி'**

Lyca TV

# உலகின் மிகப் பிரமாண்டமான தொலைக்காட்சி நிலையம்

## 40க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்

## 7000க்கும் அதிகமான சூப்பர்ஹிட் திரைப்படங்கள்

INCLUDED

TENTKOTTA

1000க்கும் அதிகமான
Tamil Super hit
திரைப்படங்கள்




INCLUDED

EROS NOW

6000க்கும் அதிகமான
Hindi &Tamil
திரைப்படங்கள்




விசேட சலுகை ஒருவருட
இணைப்புச் சந்தா
LYCATV SET TOP BOX உடன்



€79
மட்டுமே

Roku · tv · AirPlay · chromecast · amazon fireTV · Samsung SMART TV · Panasonic SMART VIERA · LG Smart TV · SONY · kindle fire

**SUBSCRIBE NOW!**

CUSTOMER SERVICE
036 967 2151

SALE
014 607 7345

www.lycatv.tv

பாரிஸ் லாச்சப்பலில்

# கோபால் அன் கோ

# GOPAL & CO

இலங்கையிலிருந்து
தருவிக்கப்பட்ட
*மரக்கறிவகைகள்*
மற்றும்
*கடலுணவுவகைகள்*
உட்பட
அனைத்து
*மளிகைப்பொருட்களையும்*
பெற்றுக்கொள்ள
நம்பிக்கையான
ஸ்தாபனம்!




**இலங்கை இந்தியாவிற்கு மிகக் குறைந்த விலையில் கதைப்பதற்கு Kish Mobile!**



**Tél : 09 51 56 76 52 Fax : 01 46 07 13 03**

**72, Rue Louis Blanc - 75010 Paris**

M°: La Chapelle

# உங்கள் கவனத்திற்கு!

## 2017 ஆரம்பத்திலிருந்து...



- சிறுவர்கள் எந்த விதத்திலும் பெற்றோர்களால் துன்புறுத்தப்படுவதை, தண்டிக் கப்படுவதை, மனம் நோகடிக்கப் படுவதை சட்டம் முற்றிலுமாகத் தடை செய்கின்றது. 1979இல் உலகில் முதன்முறையாக சுவீடன் இந்தச் சட்டத்தை அமுல்படுத்தியது.

பிரான்சில் திருமணம் செய்யும் புதிய தம்பதிகளுக்கு அவர்களது திருமண நிகழ்வின் போது அதிகாரிகளால் இப் புதிய சட்டத்தை நினைவுபடுத்தப்படும் நடைமுறையும் அறிமுகமாகின்றது.



- முதலாம் திகதியிலிருந்து நீங்கள் பிரா ன்ஸ் குடியுரிமையாளராக இருந்தால் தன்னியல்பாகவே உடல் உறுப்புத் தானம் செய்பவராகின்றீர்கள். இந்த நடைமுறை ஏனைய ஐரோப்பிய நாடுகளில் ஏற்கனவே உள்ளது. (இதை விரும்பாவிட்டால் அதற்கான பிரத்தியேக விண்ணப்பத்தை நீங்கள் நிரப்பி அனுப்பவேண்டும்)

- 50 பணியாட்களுக்கு மேல் வேலை செய்யும் நிறுவனங்களில், தமது பணியாட்களின் கைத் தொலைபேசி பாவனை தொடர்பில் அவர்களுடன் கருத்தரங்கு வைக்கப் பணிக்கப்பட்டுள்ளது. தூக்கமின்மை மற்றும் உறவுகளில் விரிசல் நிலையைப் போக்க அவற்றின் அதிக பாவ னையைத் தடுக்கும் வகை யில் ஆலோசனைகள் வழங்கப்படவேண்டும். எந்த சந்தர்ப்பங்களில் அவற்றை முற்றிலும் நிறுத்திவிடவேண்டும் என்பது தொடர்பிலும் விளக்கமளிப்பது நிறுவன சட்ட விதிகளில் உள்வாங்கப்பட்டுள்ளது.



- வங்கிக் கணக்கு மற்றும் கடனட்டைக்கான கட்டணங்கள் அதிகரிக்கின்றன. கடனட்டைப் பாவனை மற்றும் வங்கிக் கணக்குப் பராமரிப்புக்கான அடிப்படைக் கட்டணங்கள் அதிகரிக்கின்றன. வங்கிக்கணக்கு பராமரிப்புக்கான கட்டணம் சராசரி யாக 13 வீதம் அதிகரிப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

- பிரான்சின் அனைத்து முக்கிய நகரங்களுக்கும் இச் சேவை அறிமுகமாகின்றது. ஜனவரி நடுப்பகுதியில் இருந்து பாரிசுக்குள் உள்ள அனைத்து வாகனங்களும் சூழல் மாசுபாட்டு அளவைக் காட்டும் ஸ்ரிக்கர் (vignettes) ஒட்டவேண்டும். மிகக் குறைந்த அளவில் மாசைக் குறிக்கும் பச்சை நிற ஸ்ரிக்கரில் ஆரம்பித்து நாவல், மஞ்சள், செம்மஞ்சள், செம்மண்ணிறம் எனச் சென்று ஆகக் கூடிய மாசை ஏற்படுத்தும் வாகனத்திற்கு சாம்பல் நிற ஸ்ரிக்கரும் ஒட்டப்பட வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.




- கடந்த யூலை மாதத்திலிருந்து சுப்பர் மாக்கட்களில் பிளாஸ்ரிக் பைகளின் பாவனை தடைசெய்யப்பட்டிருந்ததுடன் ஜனவரி மாதத்திலிருந்து fruit and veg கடைகளிலும் பிளாஸ்ரிக் பைகள் தடை செய்யப்படுகின்றன. மீள் சுழற்சிக்கு உள்ளாகக் கூடிய பைகள் மட்டுமே பயன்படுத்த முடியும்.





- கர்ப்பிணித் தாய்மார் மற்றும் 'நீண்டகால' நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் வைத்தியரிடம் செல்லும் போது உடன– டியாக செலுத்தும் வைத்திய ஆலோசனைக் கட்டணம் எதுவும் செலுத்தத் தேவையில்லை. 2017 நவம்பர் முதல் ஏனைய நோயாளி களும் கூட வழமையாக செலுத்தும் 23 யூரோக்கள் உடனடியாகவே செலுத்தத் தேவையில்லை.



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு



## அபராதப்பணம் அதிகரிப்பு!

பாரிஸின் வீதிகளில் விதி மீறி வாகனங் களைத் தரித்து வைப்ப தற்கான தண்டப் பணம் மீண்டும் அதிகரிக்கின்றது. பாரிஸில் கார்கள் நிறுத்தப்படுவதைத் தடுப்பதற்கும் இடநெருக்கடியைப் போக்கவும் பாரிய நடவடிக்கையாக இதனைக் குறிப்பிடும் அதிகாரிகள் பாரிஸில் நிறுத்தப்பட்டிருக்கும் 80, 000 கார்கள், உரிமையாளர்களால் "வாரம் முழுவதுமே" எடுத்துச் செல்லப்படுவதில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

விதிமீறி பாரிஸில் (வலயம் 1) வாகனங்களைத் தரிப்பிடு வோருக்கான தண்டப் பணம் 17யூரோக்களில் இருந்து 50யூரோக் களாகவும் வலயம் 2இல் 35யூரோக்களாகவும் அதிகரிக் கின்றது (2018இலிருந்து).

சாதாரணமாக வெளியாட்கள் பாரிசில் கார்களைத் தரிப்பிட மணித்தியாலத்திற்கு நான்கு யூரோக்களும் பாரிஸைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் 2.40யூரோக்களும் செலுத்த வேண்டும். ஒரு நாளைக்கு 0.65யூரோவும் வாரத்திற்கு 3.25யூரோவும் என செலுத்தி வந்த பாரிஸ்வாதிகள் நாளுக்கு 1.50யூரோக்களும், வாரத்திற்கு 9யூரோக்களும் செலுத்த வேண்டும். இச் சட்டம் 2016இல் கொண்டுவரப்பட்டது.



**அதிக விலையுடைய வீடு விற்பனையாகியது!**

பிரான்சின் லூயிஸ் 16ம் மன்னனின் கோட்டை Château Louis XIV உலகின் மிக உயர்ந்த விலையுடைய வீடு என்ற பெரு மையுடன் விற்பனையாகியுள்ளது. இந்தக் "கோட்டை வீடு" 275 மில்லியன் யூரோக்களுக்கு மத்திய கிழக்கு நாட்டைச் சேர்ந்த ஒரு–வரால் வாங்கப்பட்டுள்ளது.

•

மனிதனாக இரு.
எந்த வழியிலும்
குறைகள் இல்லாமல்
இருப்பதற்கு
முயற்சி செய்யாதே!
ஏனெனில்
குறைகள் இல்லாமல்
முழுமையானவராக
இருப்பது
மனநோயாகும்.

- ஓஷோ

•



## RER சேவையில் மாற்றம்!




RER நீண்ட காலங்களுக்குப் பின்னர் ஒருவாறு தனது சேவையில் மாற்றம் கொண்டுவர தயாராகியுள்ளது. "இந்த நூற்றாண்டின் முதல் திட்டம்" என சிலர் பெருமூச்சோடு பேசு–வதையும் ஊடகங்கள் குறிப்பிடுகின்றன. 270 புதிய தலைமுறை RER தொடரிகளை சேவை யில் ஈடுபடுத்துவதற்கான ஒப்பந்தம் ஒன்றில் STIF மற்றும் SNCF கைச்சாத்திட்டுள்ளனர். 1945இலிருந்து செயற்பட்டுவரும் Ile-de-France போக்குவரத்து வலையமைப்பில் மாற்றம் கொண்டுவருவதற்கான கோரிக்கை 2013இல் முன்வைக்கப்பட்டிருந்ததும் தற்பொழுது சாதகமான முடிவுக்கு இணங்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் பாரிய மாற்றத்திற்கு 3.5 பில்லியன் யூரோக்கள் செலவிடப்படவுள்ளன. 2020இல் இதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 2022இல் புதிய தலை–முறை RER NG தொடரிகள் (RER New Ger-neration) சேவையில் ஈடுபடவுள்ளன. RER-D (Creil-Melun-Malesherbes), RER E (Saint-Lazare-Chelles-Tournan) ஆகிய தொடர்களில் இவை சேவையில் ஈடுபடும். இந்தப் புதிய தொடரிகள் முற்றிலும் பிரான்சிலேயே தயாரிக்கப்படவேண்டும் என்பது உறுதிபடத் தெரிவிக்கப்பட்டு Alstom மற்றும் Crespin ஆகிய நிறுவனங்களுடன் நிர்மாண ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



**ஆசையில்லாத முயற்சியாலும் முயற்சியில்லாத ஆசையாலும் பயனில்லை!**

## விற்பனையாகும் 'காதல் பூட்டுக்கள்'



**கடந்த** வருடம் பாரிஸ் பாலங்களிலிருந்து பாலத்தின் பாதுகாப்புக் கருதி அகற்றப்பட்ட "காதல் பூட்டுக்கள்" விற்பனைக்கு வரவுள்ளன. பல ஆண்டுகளாக காதலர்களால் பூட்டப்பட்டுவந்த கிட்டத்தட்ட ஒரு மில்லியன் பூட்டுக்கள் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் அகற்றப்பட்டிருந்தது. 65 தொன்கள் நிறையுடைய இந்தப் பூட்டுக்களில் 10 தொன்களை விற்பனை செய்யவுள்ளனர். பாரிஸின் நவீன நினைவுச் சின்னமாக மக்களால் இவை கருதப்படும் என சூழலியல் அதிகாரிகள் எண்ணுகின்றனர்.

இந்தக் காதல் பூட்டுக்கள் அகதிகளுக்கான அமைப்புக்கள் ஊடாக விற்பனை செய்யப்பட்டு திரட்டப்படும் நிதி அகதிகளுக்காகவே செலவிடப்படவுள்ளது. இவை மூலம் 100, 000 யூரோக்கள் திரட்டமுடியும் என அதிகாரிகள் நம்புகின்றனர். விற்பனை செய்யப்படாத பூட்டுக்கள் உருக்கப்பட்டு பின்னர் அவை இரும்பாக விற்பனையாகவுள்ளதாகக் குறிப்பிடும் அதிகாரிகள் இந்த வருடத்தின் ஆரம்பப் பகுதியில் இதற்கான நடவடிக்கைகள் தொடங்கலாம் எனத் தெரிவித்துள்ளனர்.



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

# பாரிஸ் - மகாஜனா கல்வி நிலையம்

## *Mahajana Master Institute - Paris.*

**எமது 10வது ஆண்டில்... நாம் கடந்து வந்த கற்றல் – கற்பித்தல் படிமுறை வளர்ச்சியை வெற்றிக்களிப்புடன் திரும்பிப் பார்க்கின்றோம்!...**

பாரிஸ் புலம்பெயர் தமிழர்களின் ஆங்கிலக்கல்வி முறைமையில் சர்வதேச முன்னோடிகளான **Cambridge University** மற்றும் **British Council** உடைய சீரிய – நேரிய வழித்தடத்தில் ஐரோப்பிய வாழ் இளம் தலைமுறையினர் விரும்பும் வகையில் என்றுமே முன்னோடிகளாக நாம்....






| PRIMAIRE (TOUT NIVEAU) | COLLEGE (TOUT NIVEAU) | LYCEE (TOUT NIVEAU) |
|---|---|---|

**• COURS D'ANGLAIS** ( Mercredis et Samedis)

Programmes de UNIVERSITY OF CAMBRIDGE / BRITISH COUNCIL

- o Starters 7, 8 ans
- o Movers 9, 10, 11 ans
- o Flyers 12, 13 ans
- o KET 13 ans et plus
- o PET
- o FCE

**• SOUTIEN SCOLAIRE** (Mercredis, Samedis et Dimanches)

(Tout niveau)

- o Niveau Primaire (CP – CM2)
- o Niveau Collège (6ème – 3ème)
- o Niveau Lycée (2nd – Terminale)

**• COURS DE MATHEMATIQUES** (Samedis et Dimanches)

- o Niveau Collège (6ème – 3ème)
- o Niveau Lycée (2nd – Terminale)

**• COURS DE FRANÇAIS** (Samedis et Dimanches)

- o Niveau Collège (6ème – 3ème)
- o Niveau Lycée (2nd – Terminale)

**Renseignements et Inscriptions au 06 11 68 82 50 / 06 28 61 28 63.**

## 7, Rue Emile Zola,93120 La Courneuve.

RER B : (La Courneuve Aubervilliers) ல் இருந்து 5 நிமிட நடைதூரம்

Métro : (La Courneuve) ல் இருந்து பஸ் இலக்கம் 173 ஊடாக வந்து Hemet தரிப்பிடத்தில் இறங்கவும்

# துயர் பகிர்வு

வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்



**அமரர்**
**செட்டியப்பன் மோகன்குமார்**

தோற்றம் : 25. 01. 1972
மறைவு : 30 . 10. 2016



**அமரர்**
**செல்லையா பூலோகசுந்தரநாதன்**
(யாழ். அராலி)

தோற்றம் : 03. 02.1951
மறைவு : 22. 12. 2016



**அமரர்**
**செல்லத்துரை பொன்னம்மா**
(யாழ். மட்டுவில் கிழக்கு)

தோற்றம் : 02. 09. 1932
மறைவு : 13. 11. 2016



**அமரர்**
**சின்னக்குட்டி குட்டித்தம்பி**
(யாழ். கோப்பாய், பிரான்ஸ்)

மறைவு : 29. 12. 2016



**அமரர்**
**நித்தியசிவம் மணிமேகலாதேவி**
(யாழ். நல்லூர், பிரான்ஸ்)

தோற்றம் : 18.01.1944
மறைவு : 18.11.2016



**அமரர்**
**கணபதிப்பிள்ளை சீவரத்தினம்**
(அராலி)

தோற்றம் : 01. 03. 1926
மறைவு : 30. 12. 2016



**அமரர்**
**துரைசிங்கம் மகேந்திரன்**
(கிளிநொச்சி, சுவிஸ்)

தோற்றம் : 08. 08. 1966
மறைவு : 28. 11. 2016



**அமரர்**
**கணேசலிங்கம் ரமேஸ்**
(யாழ்ப்பாணம், பிரான்ஸ்)

தோற்றம் : 19. 01. 1973
மறைவு : 30. 12. 2016



**அமரர்**
**பொன்னையா துரைராசா**
(யாழ். சுழிபுரம், வவுனியா)

தோற்றம் : 13. 09. 1945
மறைவு : 29. 11. 2016



**அமரர்**
**இராமலிங்கம் ஆறுமுகம்**
(கிளிநொச்சி, பிரான்ஸ்)

தோற்றம் : 27. 09. 1938
மறைவு : 05. 01. 2017



**அமரர்**
**கந்தசாமி பூபாலசிங்கம்**
(யாழ். மாவிட்டபுரம், பிரான்ஸ்)

தோற்றம் : 12. 07. 1938
மறைவு : 06. 12. 2016



**அமரர்**
**செபஸ்ரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை**
(யாழ். புங்குடுதீவு 1ம் வட்டாரம்)

தோற்றம் : 14. 01. 1947
மறைவு : 13. 01. 2017



**அமரர்**
**லோகேந்திரன் லதீப்**
(பிரான்ஸ்)

தோற்றம் : 12. 10. 2012
மறைவு : 06. 12. 2016



**அமரர்**
**யோசேப் ஆகத்தம்மா**
(யாழ். சங்கானை, பிரான்ஸ்)

தோற்றம் : 07. 06. 1944
மறைவு : 18. 02. 2015



**அமரர்**
**சுப்பிரமணியம் ஞானாம்பிகை**
(யாழ். வேலணை, பிரான்ஸ்)

தோற்றம் : 12. 01. 1935
மறைவு : 09. 12. 2016



**அமரர்**
**ஆறுமுகம் பசுபதிப்பிள்ளை**

தோற்றம் : 14. 08. 1927
மறைவு : 20. 01. 2017



**அமரர்**
**தேவராஜா பிரசாத்**
(யாழ். கல்வியங்காடு, இத்தாலி)

தோற்றம் : 02. 11. 1990
மறைவு : 18. 12. 2016



**அமரர்**
**நடராஜா பாலச்சந்திரன்**
(யாழ். திருநெல்வேலி, பிரான்ஸ்)

தோற்றம் : 11. 03. 1951
மறைவு : 23. 01. 2017




**2026ஆம் ஆண்டிலிருந்து**
**உலகக் கிண்ண**
**உதைபந்தாட்டப் போட்டியில்**
**48 அணிகள்**
**விளையாடுவதற்கு உலகக் கோப்பை உதைபந்தாட்டச் சம்மேளனம் ஏகமனதாக ஒப்புக்கொண்டுள்ளது.**

*16 அணிகள் கொண்ட மூன்று குழுக்களாக விளையாடப்பட்டு முதல் இரு குழுக்கள் அடுத்த கட்ட போட்டி நிலைக்கு தெரிவாகும். அதன்படி 32 தனி அணிகள் knock-out முறையில் விளையாடுவார்கள். புதிய கட்டமைப்பின் படி 80 போட்டிகள் இடம்பெறும். தற்பொழுது 32 அணிகள் கொண்டு 64 போட்டிகள் இடம்பெறுகின்றன.*

**லாக்கூர்னெவ்**
**சிவன் கோவிலில்**
**மகா சிவராத்திரி**
**24.02.2017 நள்ளிரவு**
**பஞ்சலிங்க அர்ச்சனை நடைபெறும்.**






**சைவ சமய வகுப்புக்கள்**
லாச்சப்பல்
**அம்மன் கோயிலில்**
இலவசமாக
நடாத்தப்படுகின்றன.





இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு



# பிரான்ஸில் ட்றோன்களுக்கு தடை வரும்!

பிரான்சில் சென்ற வருடம் மட்டும் 3 இலட்சம் ட்றோன்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. ஆனால் அவை தவறான நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படலாம் என்ற சந்தேகம் பாதுகாப்பு அதிகாரிகள் மத்தியில் எழுந்துள்ளன.

எனவே விரைவில் அமுலுக்குக் கொண்டுவரும் வகையில் புதிய சட்டங்களை உள்ளடக்கிய வரைபிற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவளித்துள்ளனர்.

இந்த சட்டம் அமுலுக்கு வரும்போது தடை செய்யப்பட்ட பிரதேசங்களில் ட்றோன்கள் பறக்கவிடப்படுமாயின் ஆறு மாத சிறைத் தண்டனையும் 15000யூரோக்கள் அபராதமும் அறவிடப்படும்.

2014 நவம்பர் மாதம் பிரான்ஸின் அணு உலைகள் மேலாக இவ்வாறான ட்றோன்கள் பறந்ததும் அதில் எவையும் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதும் அதிகாரிகள் மத்தியில் உறுத்தும் விடயமாகவே இருந்து வருகின்றது.

800 கிராம்களுக்கு மேலான எந்தவொரு ட்றோனும் இனி–மேல் மேலதிக பாதுகாப்புக் கருவிகள் பொருத்தப்பட்டே பறக்கவிடப்படவேண்டும். முக்கியமாக தடைசெய்யப்பட்ட பகுதிகளில் பறப்பதைத் தடுக்கும் கருவி, பறப்பின்போது கட்டுப்பாட்டை இழக்கும் சந்தர்ப்பத்தில் ஒலியெழுப்பும் கருவி போன்றவை கட்டாயமாக்கப்படவுள்ளன.

ஒக்ரோபர் 12ஆம் திகதியிலிருந்து இச்சட்டம் அமுலுக்கு வந்திருந்தாலும், தமது ட்றோன்களில் இவ்வாறான கருவி–களைப் பொருத்திப் பயன்படுத்த அதன் உரிமையாளர்களுக்கு 2019 வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

# கருக்கலைப்பைத் தடைசெய்!



கருக்கலைப்பைத் தடை செய்யக் கோரியும், கருத்தரிப்புத் தொடர்பான தவறான தகவல்களைப் பரப்பிவரும் இணைய தளங்களைத் தடைசெய்யக் கோரியும் பல்லாயிரக் கணக்கான மக்கள் பாரிசின் வீதிகளில் இறங்கிப் போராட்டம் நடாத்தியுள்ளனர்.

பிரான்சின் புதிய அதிபர் தேர்வுக்கு இன்னும் சில மாதங்களே இருக்கும் நிலையில் இந்த ஆர்ப்பாட்டம் மக்களால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட ரீதியில் தான் கருக்கலைப்பை எதிர்த்தாலும் இதனைச் சட்டவிரோதமாக்குவதற்கான நடவடிக்கையில் ஈடுபடப் போவதில்லை என வலது சாரிக் கட்சியின் முன்னணி வேட்பாளர் பிரான்சுவா பியோன் குறிப்பிட்டுள்ளார். **“பலவீனமானவர்களைப் பாதுகாப்பதே உண்மையில் பலம்”** என்ற தொனிப்பொருளில் கிட்டத்தட்ட 50, 000 மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரான்சில் 1975ஆம் ஆண்டிலிருந்து கருக்கலைப்பு சட்டத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.


இதன் விளைவாக ஒவ்வொரு ஆண்டும் அண்ணளவாக 220000 சிசுக்கள் கருவிலேயே அழிக்கப்படுகின்றனர். அதாவது பெண்களில் மூன்றில் ஒருவர் தன் வாழ்நாளில் ஒரு தடவை–யேனும் கருக்கலைப்பில் ஈடுபடுகின்றார்.








இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு



# ஜனாதிபதியின் கருணையினால்

## ஜக்குலின் சோவாஜ் விடுதலை!



**பிரான்சில் குடும்ப வன்முறைகளால் வருடத்துக்கு சராசரியாக 140 பெண்கள் கொல்லப்படுகின்றனர் !**

*2012ம் ஆண்டு தனது கணவரை (Norbert Marot) துப்பாக்கியால் சுட்டுக்கொன்றார் எனக் குற்றம் சுமத்தப்பட்டு Jacqueline Sauvage இற்கு பத்து வருட கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டது. மேல் முறையீட்டின்போது ஜக்குலின் சோவாஜின் மகள்களினது வாக்குமூலமும் எதிர்தரப்பு வக்கீலினது பிரதி வாதமும் கொலை வழக்குக்கு வேறு முகத்தை கொடுத்ததோடு பிரான்ஸ் முழுவதும் மக்களைத் திரும்பிப் பார்க்கவும் வைத்தது.*

*பல வருடங்களாக ஜக்குலினும் அவரது மகள்களும் தொடர்ந்து பாலியல் ரீதியாகவும் உடல் ரீதியாகவும் கொடுமைகள் அனுபவித்து வந்துள்ளனர். திருமணமாகி 50 வருடங்களாக பொறுத்து வாழ்ந்தவர் தொடரும் மகள்கள் மீதான கொடுமைகளைப் பொறுக்க முடியாது ஒருநாள் வேட்டைத் துப்பாக்கியால் தனது கணவரைச் சுட்டுக்கொன்றுள்ளார். நடந்தது கொலைதான் என்ற போதிலும் பெண்கள் மீது நடாத்தப்படும் வன்முறைகள் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என ஜக்குலின் சோவாஜ்ற்கு ஆதரவாக பல அமைப்புகள் குரல் கொடுத்தன. இருப்பினும் நீதிமன்றம் தனது கடமையை குற்றவியல் அடிப்படையில் ஆய்வு செய்து தண்டனை வழங்கியது.*

*பிரான்சில் குடும்ப வன்முறைகளால் வருடத்துக்கு சராசரியாக 140 பெண்கள் கொல்லப்படுகின்றனர் எனவும் மூன்று நாளுக்கு ஒரு பெண்ணும் 14,5 நாளுக்கு ஒரு ஆணும் கொலை செய்யப்படுகின்றனர் எனவும் நீதித்துறை புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இக்காரணங்களாலேயே இவ்வழக்கு பிரான்சில் தீவிரம் பெற்றதோடு குடும்ப வன்முறைகள் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்ற கருத்தும் அழுத்தம் பெற்றது.*

*தொடர்ந்து, அதிபர் பிரான்சுவா ஹொலந்த் ஜக்குலின் சோவாஜ்ற்கு சிறைத் தண்டனையிலிருந்து விடுதலை வழங்கினார்.*

*இவ் விடுதலை "ஜனாதிபதியின் கருணை" Grâce Présidentielle அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. சட்டத்தால் தண்டிக்கப்பட்ட ஒரு குற்றவாளி கருணை மனு அடிப்படையில் விடுதலை செய்யும் உரிமை பிரான்ஸ் ஜனாதிபதிக்கு மட்டுமே உள்ளது. இது பிரான்ஸ் சட்ட அமைப்பின் ஒரு அங்கமாகும்.*





*பிரான்சின் 5வது குடியரசில் அனைத்து பிரான்ஸ் அதிபர்களும் ஏதோவொரு தருணத்தில் Grâce Présidentielleஐக் கையிலெடுத்து பலருக்கு மன்னிப்பு வழங்கியுள்ளனர். இன்று பதவி வகிக்கும் 7வது அதிபரான பிரான்சுவா ஹொலந்த், தனது ஆட்சிக்காலத்தின் இறுதிக்கட்டத்தில் இத்தகைய ஒரு மகத்தான முடிவை எடுத்துள்ளமை பன்முகப்பரப்பில் பெருமையாகவே பார்க்கப்படுகின்றது. பிரான்சுவா ஹொலந்த் அதிபராவதற்கு முன்பு சோசலிசக் கட்சியின் தலைமையில் இருந்த காலங்களில் பிரான்சின் சட்ட அமைப்பான ஜனாதிபதியின் கருணை முறையை மிகவும் வன்மையாகக் கண்டித்து வந்தார் என்பதும் இன்று மூன்றாவது முறையாக Grâce Présidentielleஐ உபயோகித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.*



## டொனால்ட் ட்ரம்பின் மெழுகுச் சிலை

*பாரிஸ் 9 – Grands Boulevards ல் அமைந்துள்ள Grevin மெழுகுச் சிலை அருங்காட்சியகத்தில் (Musée Grévin) டொனால்ட் ட்ரம்பின் மெழுகுச் சிலை திரைநீக்கம் செய்யப்பட்டுள்ளது. அவருடைய தலை முடியை வடிவமைப்பதே தனக்கு மிகவும் சவாலாக இருந்ததாக குறிப்பிடும் சிற்ப வடிவமைப்பாளர் Eric Saint Chaffray, ஹிலாரி கிளிங்டனின் சிலை வடிவமைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றிருந்ததையும் பட்டும்படாமலும் தெரிவித்துள்ளார்.*

*Grevin மெழுகுச் சிலை அருங்காட்சியகத்தில் பிரான்சின் வரலாற்று நிகழ்வுகள், பிரெஞ்சுப் புரட்சியின் கொடூர காட்சிகள், திரைப்பட நட்சத்திரங்கள், உலகப் பிரபலங்கள் என்பன மெழுகுச் சிற்பங்களாகக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன.*


**உங்களிடம் கற்றுக்கொள்ளும் மனம் இருந்தால் முட்டாள்களிடமிருந்துகூட கற்றுக்கொள்ளமுடியும். அந்த மனம் இல்லாவிட்டால் புத்தனிடமிருந்துகூட எதையும் கற்றுக்கொள்ளமுடியாது - ஓஷோ**


# 'உலகில் தொடரும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அநாகரிகமானவை'

– OXFAM

உலகில் தொடரும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அநாகரிகமான கண்ணிமற்ற ஏற்றத்தாழ்வுகள் என அரசு சாராத் தொண்டு நிறுவனமான OXFAM தனது வருடாந்த அறிக்கையில் சுட்டியுள்ளது.


உலகின் எட்டுப் பெருஞ் செல்வந்தர்களின் சொத்து மதிப்புகள், உலகில் வறுமையில் வாழும் 3,6 மில்லியாட் அதாவது ஏழ்மையில் வாழும் ஐம்பது சதவீத மக்களின் சொத்து மதிப்புகளை விட அதிகமானதாகும்.

உலகப்பெருஞ் செல்வந்தர்கள் வரிசையில் முதலாவது இடம் எப்போதுமே "சுப்பர் மில்லியாடர்" எனச் செல்லமாக அழைக்கப்படும் மைக்ரொ சொப்ட் (Microsoft) தோற்றுவிப்பாளர் பில் கேட்ஸ்க்குத்தான். சொத்து மதிப்பு பல மில்லியாட் டொலர்களாகும். இது வெறும் 25 வருடங்களில் சேர்ந்த சொத்துக்களாகும். அவர் தனது சொத்துக்கள் அனைத்தையும் செலவு செய்யவேண்டுமாயின் நாளுக்கு 4 மில்லியன் டொலர்கள் படி செலவு செய்தால் 2738 ஆண்டுகள் தேவைப்படும்..

- அடுத்தவர் ஸ்பெயினைச் சேர்ந்த Amancio Ortega. இவர்தான் உலகெங்கும் விரிந்து பரந்துள்ள Zara விற்பனை நிலையங்களின் தோற்றுவிப்பாளராவார்.
- மேலும், Warren Buffet பன்முக முதலீட்டு ஸ்தாபனமான Berkshire Hathaway இன் தலைவர்.
- மெக்சிக்கோவைச் சேர்ந்த Carlos Slim லத்தீன் அமெரிக்காவின் டெலிக்கொம்களின் உரிமையாளர்.
- Jeff Bezos அமெசோன் நிறுவுனர்.
- Mark Zuckerberg - Facebook
- Larry Ellison மென்பொருள் உருவாக்க நிறுவனமான Oracle ஸ்தாபனத்தின் நிறுவுனர்.
- அமெரிக்க முதலீட்டு நிறுவனமான Bloomberg LP இன் தோற்றுவிப்பாளர் Michael Bloomberg என செல்வந்தர் பட்டியல் தொடர்கிறது.


இவர்களின் சொத்து மதிப்புகள் 427 மில்லியாட் யூரோக்களாகும். 50 சதவீதமான ஏழை மக்களின் மொத்த சொத்துக்களின் மதிப்பு 409 மில்லியாட் யூரோக்களாகும்.

உலகில் ஒரு சிலர் மட்டும் அதீத




செல்வந்தர்களாகவும், ஏனையோர் ஏழ்மையில் வாழ்வதென்பதும் ஏற்றுக்கொள்ள முடியாத ஏற்றத்தாழ்வாகும். இந்நிலை 2016ம் ஆண்டில் 62 செல்வந்தர்களின் சொத்து மதிப்புகளோடு ஒப்பிடும் நிலையில் இருந்தது. 2017ல் வெறும் 8 செல்வந்தர்களின் சொத்து மதிப்புக்களோடு ஒப்பிடும் அளவில் இருப்பது அதிர்ச்சியளிப்பதாக அவ் அறிக்கை மேலும் கோடிட்டுள்ளது.

இந்நிலை இத்தகைய வேகத்தில் தொடருமாயின் வருங்காலங்களில் உலகில் தற்போது போன்ற சமூக, பொருளாதார நெருக்கடிகள் என்றில்லாமல் ஏழைகள் எதிர் செல்வந்தர்களுக்கான போராட்டங்களாக வெடிக்கும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.




உலகில் வறுமையை முற்றாக ஒழிக்க வேண்டும் என்ற நோக்குடன் 1942ம் ஆண்டு 18 சுயாதீன அமைப்புகளின் கூட்டமைப்பான இங்கிலாந்தில் தோற்றம் பெற்ற அமைப்புத்தான் Oxford Committee for Famine Relief (Oxfam)

ஒரு சிலரின் நலன்களை மட்டும் கருத்தில் கொள்ளாது வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் நலன்களையும் கருத்திற் கொண்ட பொருளாதார மேம்பாடுகளை உருவாக்குவது அவசியமாகும். அதற்கு இது முக்கிய தருணம் எனத் தெரிவித்த Oxfam 99 சதவீதமான மக்களுக்குமான பொருளாதார மேம்பாடுகள் 9 எனத் தலைப்பிட்டு அறிக்கையை வெளியிட்டது.

சுவிஸில் நடைபெறும் உலகப் பொருளாதார குழும ஒன்றுகூடலின் முதல் நாளில் Oxfam தனது அறிக்கையை வருடா வருடம் சமர்ப்பித்து வருகின்றது.




2ம் பக்கத் தொடர்ச்சி...

**Rama Yade** : பிரான்ஸ் அரசியல் பரப்பில் பிரபலமானவர்தான்.



நிக்கொலா சார்க்கோசியின் ஆட்சியில் மனித உரிமைகள் சார் அமைச்சின் செயலாளர், ஐரோப்பிய விளையாட்டுத் துறைச்செயலாளர், யுனெஸ்கோவிற்கான பிரான்ஸ் தூதுவர், ile de france ஆலோசனைக் குழு உறுப்பினர் எனப் பல பதவிகள் வகித்தவர்.



**Laurent Baffie** : நடிகர், தொலைக்காட்சி மற்றும் வானொலி தொகுப்பாளர், மேடைக் கலைஞர் எனப் பன்முகச் செயற்பாட்டாளர்.

**Renaud Camus**- எழுத்தாளர், அரசியல் ஆய்வாளர், கட்டுரையாளர்

**Sylvain Durit**- ஆன்மீகவாதி எனத்தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டவர். 2012ல் உலகம் அழியப்போகின்றது எனவும் பிரான்சின் ஒரு சிறு கிராமம் Bugarach மட்டுமே தப்பிக்கும் என மக்களை கிடுகிடுக்க வைத்தவர் இவரே.



**Oscar Femaru** - பிரான்சின் கடல்கடந்த மாகாணங்களில் ஒன்றான பொலினீசியா பிரான்சின் முன்னாள் அதிபர்

என மிகப்பெரும் பட்டியல் தயாராகி வருகிறது.

சோசலிசக் கட்சியின் வேட்பாளர் யார் என 29 ஜனவரிக்குப் பின்னரே தெரியவரும். தற்போது முதல் சுற்றில் முன்னாள் பிரதமர் மனுவல் வால்ஸ், Benoît Hamon, Arnaud Montebourg, Vincent Peillon, Sylvia Pinel François de Rugy ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

## பிரான்ஸ் : தேர்தல்களம் 2017

24ம் பக்கத் தொடர்ச்சி...

சோசலிசக்கட்சியைச் சேர்ந்த இருவரும் பல புள்ளிகளில் முரண்படுகின்றனர்.

மனுவல் வால்சால் பெரிதும் ஆதரிக்கப்படும் La loi Travail சட்டமூலத்தை இல்லாமல் செய்ய வேண்டும் என்பதில் Benoît Hamon உறுதியாகவுள்ளார்.

Benoît Hamon ன் மிகப்பெரிய கனவான பிரான்ஸ் மக்கள் அனைவருக்குமான ஒரே வருவாய் (Le revenu Universel) இதன் முதற்கட்டமாக RSA வை 10 சதவீத உயர்வு (600 யூரோ) மனுவல் வால்சினால் கடுமையாகக் கண்டிக்கப்படுகின்றது. பிரான்சின் 6வது குடியரசு நிறுவல் Benoît Hamon ஆம், மனுவல் வால்ஸ் இல்லை, கஞ்சா இலை புகைப்பதற்கான அனுமதி Benoît Hamon ஆம் மனுவல் வால்ஸ் இல்லை, புதிய சிறைச்சாலைகள் மனுவல் வால்ஸ் ஆம், Benoît Hamon இல்லை என பலபுள்ளிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் நான் போட்டியிட்டால் வெற்றி பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன எனவும் Benoît Hamon போட்டியிட்டால் தோல்வி நிச்சயம் எனவும் குறிப்பிட்ட மனுவல் வால்ஸ் மக்களின் தீர்ப்பே இறுதியானது எனவும் தெரிவித்துள்ளார்.

பழைய பிற்போக்கான வாக்குறுதிகளுடன் தற்போதைய நிலையில் பிரான்ஸ் மக்களை ஒன்று சேர்த்து விட முடியாது எனவும் பிரான்ஸ் மக்களின் இதயத்துடிப்பாக எனது வாக்குறுதிகள் இருக்கும் எனவும் அவற்றை நான் நடைமுறைப்படுத்திக்காட்டுவேன் எனவும் Benoît Hamon தெரிவித்துள்ளார்.


வறுமையில் வாடும் ஆயிரம் மாணவர்களை நோக்கி..

இலங்கை தமிழ் பழையமாணவர் ஒன்றியம்

uaets


www.uaets-france.fr

கணக்கு விபரங்களை இணையத்தில் பார்வையிடலாம்.





## நிலா குறுக்கெழுத்துப் போட்டி - இல. 27



**மேலிருந்து கீழ்**

1. இது மடமையடா என்பது 2016ல் வெளியான சிம்புவின் திரைப்படமாகும் (8)
2. சைக்கிளை ... வண்டி எனவும் கூறலாம் (7)
3. ராசிகளில் ஒன்று (4)
4. நாற்காலி எனவும் அழைக்கலாம் (3)
6. 1983ல் வெளியான தெலுங்குத் திரைப்படத்தின் தமிழ் பிரதி இது. பரதத்தை மையப்படுத்திய படம். நாயகன் கமல். (6)
7. இளையவன் (3)
9. கர்ணன் பிறக்கும் போதே இதனோடு தான் பிறந்தானாம் (4)
11. மூத்தவன் (4)

**இடமிருந்து வலம்**

1. திராவிடக்கட்சிகளின் ஒப்பற்ற தலைவர். தமிழ்நாட்டின் ஆறாவது முதலமைச்சர் அறிஞர்! (5)
5. முகவரி (4)
8. சிவனின் மனைவி (3)
9. தாமரை (4) (குழம்பியுள்ளது)
10. அபாயத்தின் முன்னறிவிப்பு (6) (குழம்பியுள்ளது)
12. 1993ல் கமலஹாசனின் நடிப்பில் வெளியான திரைப்படம் (4) (மாறியுள்ளது)
13. பன்மையின் எதிர்ப்பதம் (3)
14. இரண்டாம் உலகப்போர் காலத்தில் கருணாநிதியால் ஆரம்பிக்கப்பட்டு இன்றும் தொடரும் தி.மு.க.வின் நாளிதழ் (4)
15. கர்ணனின் உயிர்த் தோழன் (6)

✔ உங்கள் பதில்களை 10 பங்குனி 2017 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்

நிலா குறுக்கெழுத்துப்போட்டி இல.26ல் பரிசு பெறுபவர்கள்.

1. நிர்மலா பொன்ராசா - Lieusaint
2. தா. ஞானசிங்காரம் - Le Blanc Mesnil
3. சர்மிளா பொன்னம்பலம் - Drancy

**போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள் !**



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

# Autre Vue

OPTICIEN

*Donnez un sens à votre Regard*

## பாரீஸ் மாநகரில் தமிழ் மக்களின் நன்மை கருதி
## இளைய தலைமுறையின் புதியதோர் உதயம்

சிறியோர் முதல் பெரியோர் வரை சகலவிதமான நவீனரக மூக்குக்கண்ணாடிகள், லென்ஸ் வகைகள் மேலும் பலவிதமான நவீன கோடைகாலக்கண்ணாடி வகைகள் சர்வதேச தரமானதாகவும் மலிவானதாகவும் உங்கள் விருப்பம் போல் தெரிவு செய்து பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே நம்பிக்கையான தமிழர் நிறுவனம் Autre Vue அத்துடன் உங்களுக்கான இலவச ஆலோசனைகள் எப்பொழுதும் வழங்கப்படும்.



23 rue lamartine - 75009 PARIS
Tél / Fax : 09 67 33 12 83 - 01 53 20 04 10
email : autrevueparis09@gmail.com
Ouvert du Lundi - Samedi de 10h00 à 20h00

58 AV FLANDRES - 75019 PARIS
Tél / Fax : 09.66.91.54.04 - 01.42.30.54.04
email : autrevueparis19@gmail.com
Ouvert du Lundi - Samedi de 10h00 à 20h00

**9, AvenuePierre et Marie Curie - 93150 Le Blanc Mesnil**
**Tél : 09.67.81.59.11 / Fax : 01.48.67.59.11 optitherapy@gmail.com**



# ஆச்சரியம், ஆனால் உண்மை!

## பிரான்ஸில் நடைமுறையில் உள்ள மூடநம்பிக்கைகள்....



ஏனைய நாட்டவர்களைப் போன்று பிரான்ஸ் நாட்டவர்களும் பல மூடநம்பிக்கைகளை நம்பத்தான் செய்கின்றார்கள்.

- வெள்ளிக்கிழமையில் வரும் 13ஆம் திகதி பற்றி அதிகம் அலட்டிக்கொள்ளாவிட்டாலும் பயம் கொள்ளத்தான் செய்கிறார்கள்.

- மேசையில் உப்புக் கொட்டுப்பட்டால் ஏதோ கெட்டது நடக்கும் என பிரான்ஸ் நாட்டவர் உட்பட பல நாட்டு மக்கள் நம்புகின்றனர்.

- தவறுதலாக நாயின் மலத்தின் மீது இடது கால் வைக்கப்பட்டால் ஏதோ ஒரு அதிஸ்டம் கிடைக்கும். வலது கால் வைக்கப்பட்டால் கெட்டது நடக்கும் என நம்புகின்றனர். அதே போன்று பறவைகளின் எச்சம் தங்கள் மீது விழுவது கெட்ட சகுனமாகப் பார்க்கப்படுகின்றது.

- ஒரு போதும் இரவு உணவு மேசையில் 13 பேர் உட்காரக் கூடாது! அவ்வாறு இருந்தால் ஏதோ கெட்டது நடந்துவிடும் என நம்புகின்றனர். இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. யேசு நாதரின் இறுதி இராப் போசனத்தின் போது அங்கு 13 பேரே இருந்தார்கள். அதில் ஒருவ ரான யூதாசே கடைசியில் காட்டிக்கொடுத்தார். இதனடிப்படையிலேயே இன்றும் 13 பேர் இருக்க நேரிட்டால் 14வது நபராக எடுத்துக்கொள்ள "இரவு விருந்தாளி" என ஒரு முட்டையை மேசை யில் வைக்கின்றார்கள்.

- கத்தியை ஒருபோதும் பரிசுப் பொருளாகக் கொடுத்தல் கூடாதாம். நீங்கள் பிரான்ஸ் நாட்டவர் ஒருவரை நண்பராகக் கொண்டிருந்தால் இதனை ஒருபோதும் செய்யாதீர்கள். நீங்கள் அவருடனான நட்பைத் துண்டிக்க விரும்புகின்றீர்கள் என்பதே அதன் பொருளா கக் கருதப்படும். முக்கியத்துவம் வாய்ந்த அல்லது விலையுயர்ந்த பொக்கிசமாகக் கருதும் கத்தி அல்லது கூரிய பொருளைப் பரிசுப் பொருளாகக் கொடுக்க விரும்பி னால் 10 சென்ரிம் என்றாலும் வாங்கிவிட்டுக் கொடுக்க வேண்டும். அந்தப் பணம் கெட்ட சகுனத்தை நீக்கிவிடுமாம்.



- அடுத்தது பாண்! பாணைத் தலை கீழாக வைப்பதும் கெட்ட சகுனம். ஒரு மேசையில் உட்கார்ந்து சாப்பிடும் போது வெட்டப்பட்ட பிரெஞ்சுப் பாண் தலை கீழாக வைக்கப்பட்டால் வைத்தவர் உட்பட அங்குள்ளவர்களுக்குப் பட்டினி ஏற்படலாம் என நம்புகின்றனர்.

- உங்களுக்குப் பெண் குழந்தை பிறக்கவேண்டுமாயின் நீங்கள் ஆந்தை ஒன்றைப் பார்க்கவேண்டும். பெண் ஒருவர் கருவுறும் காலத்தில் ஆந்தையைப் பார்த்தால் பெண்குழந்தை பிறக்கும் என நம்புகின்றனர். பெண் குழந்தைக்காக ஏங்கும் பெற்றோர் இவ்வாறு ஆந்தையைப் பார்த்தால் நினைப்பது நடைபெறும் என்பதை திண்ணமாக நம்புகின்றனர்.

- குதிரையின் லாடன்கள் (குதிரைச் சப்பாத்து)! இவற்றை கதவுக்கு வெளியில் தொங்கவிடுவது அதிர்ஸ்டத்தைத் தரும் எனவும் அது மேலிருந்து கீழ் நோக்கிக் கொழுவியிருக்கும் போதே அதிர்ஸ்டம் வீட்டுக்குள் வரும் எனவும் நம்புகின்றார்கள்.

- ஆற்றைக் கடக்கும் போது பூனையைக் கையில் வைத்துக்கொண்டு கடக்கக்கூடாதாம். பூனையை மையப்படுத்தி பிரான்சில் பல மூடநம்பிக்கைகள் உள்ளன. இரவு நேரத்தில் கறுப்புப் பூனை உங்கள் பாதையைக் கடந்தால் நிச்சயம் கெட்டது நடக்கக் காத்திருக்கின்றது என நம்புகின்றனர். முக்கியமாக நோர்மண்டியில் வாழும் மக்களை மட்டும் பாதிக்கும் ஒரு மூடநம்பிக்கையாகக் கருதப்படுவது, ஆமையின் ஓட்டைப் போன்ற நிறக் கலவை கொண்ட பூனையை நீங்கள் எப்போதாவது பார்த்தால் உங்கள் இறப்பு விபத்தின் மூலமே நேரிடும் என்பதை எதிர்வு கூறுவதாக அமையும் என்பது!





- சியேர்ஸ் (Cheers – நல்லதே நடக்கட்டும்) சொல்லும் போது கண்களைப் பார்த்து சொல்லவேண்டும். இது பலராலும் சற்றே முக்கியமாகப் பார்க்கப்படும் ஒரு விடயமாகவுள்ளது. உங்கள் கிளாஸை மற்றையவருடையதோடு தட்டும் போது கண்களைப் பார்த்து சியேர்ஸ் சொல்லாவிட்டால் ஏழு வருடங்களுக்கு காதலில் தோல்வி ஏற்படுமாம்.

- புதுவருடத்தின் போது வட்டப்புள்ளிகள் கொண்ட உடை அணிந்தால் அதிர்ஸ்டம் கிடைக்கும். அதே போன்று புதிய வீட்டுக்குச் செல்பவர்கள் மற்றைய தளபாடங்களை வீட்டுக்குள் கொண்டு செல்ல முன்னதாக ஒரு மேசையை முதலில் கொண்டு செல்ல வேண்டும் எனக் கூறுகின்றனர்.

**மூடநம்பிக்கைகள் தொடரும்...**

லாச்சப்பலில்!

# சங்கீதா அச்சகம்

புதிய சேவைகளுடன்...




**Tél : 01 44 72 08 94**

**39, Boulevard de La Chapelle 75010 Paris**





## ஓய்வுபெறும் வானிலை அறிக்கைத் தொகுப்பாளர் :



ஒவ்வொரு பிரான்ஸ் தொலைக்காட்சி செய்தி அறிவிப்பாளர்களும் பிரான்ஸ் மக்களின் வாழ்வோடு பின்னிப்பிணைந்தவாறே உள்ளனர். அந்தவகையில் ஓய்வுபெறும் TFl தொலைக்காட்சியின் வானிலைத் தொகுப்பாளர் Catherine Laborde முக்கியமானவரே. தனது 28 வருட சேவைக்கு ஓய்வு தருகிறார். ஒவ்வொரு வானிலை அறிவித்தலின்போதும் சராசரியாக 7 மில்லியன் மக்களை தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன் கட்டிப் போட்டு வைத்திருந்தார். ஜனவரி 1ம் திகதி 8 மணிச் செய்திகளுக்கு பின்னர் கால ஓட்டத்துடன், மிகவும் குளிரான இந்நாட்களுடன் நானும் விடை பெற்றுச் செல்கிறேன். நீங்கள் என்னை வெகுவிரைவில் மறந்துவிடக்கூடும், ஆனால் ஒருபோதும் உங்களை மறக்கமாட்டேன். இத்தனை ஆண்டுகளில் நீங்கள் எனக்குக் கொடுத்த நன் நினைவுகளுடன் விடைபெறுகின்றேன் என மனம் நெகிழ விடைபெற்றார். இவர் 1988 யூலை முதல் வானிலை அறிக்கையை தொகுத்து வழங்கிவருகின்றார். தொலைக்காட்சியிலிருந்து ஓய்வு என்பது எனது மற்றைய செயற்பாடுகளான எழுத்து மற்றும் மேடை நாடகங்களில் கூடுதல் நேரம் ஒதுக்குவதற்கே எனத் தெரிவித்துள்ள இவர் இதுவரை பல நூல்களை எழுதியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.






# பிள்ளைகளுக்கு தீவிரவாதிகளின் பெயர்களை வைக்கத் தடை!

பிரான்சில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு தீவிரவாதிகளின் பெயர்களை வைக்கவோ அந்தப் பெயர் கொண்டு அழைக்கவோ முடியாது. பிரான்சில் 1993ஆம் ஆண்டுவரை அதிகாரிகளால் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு வைத்திருந்த பெயர்ப் பட்டியலில் இருந்தே பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கான பெயர்களைத் தெரிவுசெய்யவேண்டும்.

பிரான்சுவா மித்ரோன் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் 1993இல் இந்த நடைமுறை நீக்கப்பட்டு பெற்றோர்கள் விரும்பிய பெயரை வைக்க சுதந்திரம் அளிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் பிள்ளையின் எதிர்காலத்தைப் பாதிக்கும் வகையில் பெயர் வைப்பதை அதன் பின்னரான புதிய சட்டம் தடை செய்கின்றது. 1993ஆம் ஆண்டின் பின் பல்வேறு சந்தர்ப்பங்களில் நீதிமன்ற தலையீட்டால் பிள்ளைகளின் எதிர்காலம் கருதி பெயர்கள் மாற்றப்பட்டிருந்தன. அண்மையில் 2012இல் கொல்லப்பட்ட தீவிரவாதியின் பெயரைப் பிள்ளைக்குச் சூட்ட நீதிமன்றம் தடை செய்துள்ளது.

கடந்த காலங்களில் பிரபலமான கட்டடங்கள், பழங்களின் பெயர், தீன் பண்டங்களின் பெயர், சர்ச்சைக்குரிய பிரபலங்களின் பெயர், சர்வாதிகாரிகளின் பெயர் போன்றவற்றை பிள்ளைகளுக்கு வைப்பதை நீதிமன்றம் தடைசெய்தமை குறிப்பிடத்தக்கது. பிள்ளைகளை எதிர்காலத்தில் இன்னொருவர் ஏளனம் செய்யும் வகையில், நையப்புடைக்கும் வகையில், அல்லது அவர்களது மனதில் ஆக்கிரோசமான கருத்துக்களை விதைக்கும் வகையில் பெயர்கள் வைப்பதை நீதிமன்றம் தடைசெய்கின்றது!



# உற்சாகம் தரும் விடுமுறை ஆண்டு - 2017 -

**கடந்த** இரண்டாண்டுகளைப் போல் அல்லாமல் 2017ம் ஆண்டு ஓய்வு கூடுதலான ஆண்டாக அமையவுள்ளது. வார இறுதி நீட்சிகள் அதிகமான ஆண்டாக பிரா ன்ஸ் மக்களின் முகங்களில் புன்னகையைத் தவழ விட்டு, 2017ம் ஆண்டு இனிதே பிறந்துள்ளது. 2016ல் அதிகமான விடுமுறை நாட்கள் குறிப்பாக மே 1, மே 8, நத்தார் எனப் பல கொண்டாட்டங்கள் ஞாயிறு தினத்தில் வந்து ஒரு லீவு நாள் போச்சே! என்ற கவலையே மக்கள் மத்தியிலிருந்தது.

இவை அனைத்தையும் நிவர்த்தி செய்யும் வண்ணம் 2017ல் 6 நீட்சி பெற்ற வார இறுதிகள் அமையவுள்ளன. அதிகமான விடுமுறை நாட்கள் திங்கள் அல்லது வெள்ளியிலேயே வருவதினால் தொடர்ச்சியான மூன்று நாட்கள் விடுமுறையாக நீட்சி பெறுகின்றது.

இவற்றை விட இன்னும் சில விடுமுறை நாட்கள் செவ்வாயிலும் வியாழனிலும் வருகின்றன. இங்கு ஒரு நாள் RTT யை உபயோகித்து நான்கு நாள் விடு–முறையாக கொண்டாட முடியும் என உற்சாகமாக உள்ளனர்.




சாவகச்சேரி இந்துக்கல்லூரி பிரான்ஸ்
பழைய மாணவர், ஆசிரியர் சங்கம் நடாத்தும்
தாமோதரகானம்
இறுதிப் போட்டி : 12.03.2017
ஞாயிற்றுக் கிழமை காலை 11.00 மணி

லாக்கூர்னெவ் பதியில்..
ஸ்ரீ பத்திரகாளி அம்மா கோயில்

24, Rue du Sous-Lieutenant
Alexis le Calvez
93120 La Courneuve
மெத்ரோவிற்கு அருகில்..


**வேலணை ப.மா.சங்கத்தின்**
**புதிய நிர்வாகிகள் 2017 -18**

| | |
|---|---|
| தலைவர் | : திரு. யா. பாலகிருஷ்ணன் |
| உபதலைவர் | : திரு. செ. ஸ்ரீபாஸ்கரன் |
| செயலாளர் | : திரு. ம. சிவகரன் |
| பொருளாளர் | : திரு. சு. கருணாநிதி |

மேலும் பதினைவர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தெரிவாகியுள்ளனர். 08.01.2017 அன்று நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் இவர்கள் தெரிவாகினர்.

# 105 வது வயதில் உலக சாதனை!



பிரான்ஸ் நாட்டு சைக்கிள் ஓட்ட வீரரான Robert Marchand தனது 105வது வயதில் உலக சாதனை ஒன்றை நிகழ்த்தியிருக்கிறார். ஒரு மணிநேரத்துள் அதிக தூரம் ஓடியவர் என்ற சாதனையைப் படைத்துள்ளார். மணித்தியாலத்தில் 22.547கி.மீ ஓடி முடித்திருக்கும் இவர் 105 வயதுக்கு மேற்பட்டோருக்கான சைக்கிளோட்டத்தில் புதிய இலக்கை நிர்ணயித்துள்ளார். 2012இல் 100 வயதுக்கு மேற்பட்டோருக்கான சாதனையையும் இவரே நிலைநாட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது. **சம்பியன் பட்டம் வெல்வதல்ல எனது நோக்கம். 105 வயதிலும் எல்லோரும் சைக்கிளோட முடியும் என்பதை நிரூபிப்பதே எனது நோக்கம்** என பெருமையுடன் தெரிவிக்கிறார் Marchand. இரண்டாம் உலகப் போரில் இவர் ஒரு போர்க்கைதி. பின்னர் லொறி ஓட்டுனராகத் தொடங்கி பல தொழில்களைத் தன்னகப்படுத்தியுள்ளார்.



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு





# பிரான்ஸ் : தேர்தல்களம் 2017

பிரான்சின் 11வது ஜனாதிபதிதேர்தலுக்கான வேட்பாளர்களை கட்சிகள் அறிவித்து வருகின்றன. வலதுசாரியக்கட்சிகளும், இடதுசாரியக்கட்சிகளும் உட்கட்சி முதற்சுற்றுத் தேர்தல் மூலம் தமது வேட்பாளர்களை தெரிவுசெய்துள்ளன. வலதுசாரியக்கட்சியின் சார்பில் François Fillon தெரிவாகிவிட்ட நிலையில் இடதுசாரிக்கட்சிகளுக்கிடையிலான முதற்சுற்று 21 மற்றும் 29 ஜனவரியில் நடைபெறுகிறது.

தற்போதைய அதிபர் பிரான்சுவா ஹொலந்த் ஆரம்பத்தில் முதற்சுற்று தேர்தலுக்கு ஒப்புதல் தெரிவித்தாலும் பின்னர் தான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை என விலகிவிட்டார். ஆட்சியிலிருக்கும் ஒரு அதிபர் இரண்டாவது முறையாக ஆட்சிக்காலத்தை தெரிந்தெடுக்காமல் தேர்தலில் இருந்து விலகுதல் என்பது ஐந்தாவது குடியரசில் இதுவே முதல் தடவையாகும்.

21 ஜனவரி இடம்பெற்ற இடதுசாரியக்கட்சிகளின் முதற்சுற்றின் முதற்கட்டத்தேர்தல் எதிர்பார்ப்புகளை மீறிய புதிய முகத்தைப் பதிவு செய்துள்ளது. அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட முன்னாள் பிரதமர் மனுவல் வால்ஸ் பின்தள்ளப்பட்டு Benoit Hamon வெற்றியீட்டியுள்ளார்.

தேர்தலில் முன்னாள் பிரதமர் மனுவல் வால்ஸ், முன்னாள் சோசலிசக்கட்சிப் பேச்சாளரும், பொருளாதாரத்துறை மற்றும் கல்வித்துறை அமைச்சருமாகிய Benoît Hamon, சோசலிசக்கட்சி நிர்வாகத்தலைவர்களின் ஒருவரும் முன்னாள் கல்வி அமைச்சருமாகிய Vincent Peillon, பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் பொருளாதார அமைச்சருமாகிய Arnaud Montebourge, பசுமைக்கட்சி வேட்பாளரும் பாராளுமன்ற துணைத்தலைவருமான François de Rugy, தீவிர இடதுசாரிக்கட்சி (PRG) தலைவரும் முன்னாள் அமைச்சருமாகிய Sylvia Pinel, மற்றும் ஜனநாயக முன்னணி (Front démocrate) கட்சியின் தலைவர், ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினருமான Jean Luc Bennahmias ஆகியோர் பங்குபற்றினார்கள்.

தேர்தலில் Benoît Hamon 36.35 வீதமும், மனுவல் வால்ஸ் 31.11 வீதமும், Arnaud Montebourge 17.52 வீதமும், Vincent Peillon 6.85 வீதமும், François de Rugy 3.88 வீதமும், Sylvia Pinel 1.97 வீதமும், Jean Luc Bennahmias 1.01 வீதமும வாக்குகளைப் பெற்று Benoît Hamon னும், மனுவல் வால்சும் இரண்டாம் சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

புள்ளிவிபரங்களில் இரண்டாவது சுற்றில் போட்டியிடுவார் என தெரிவிக்கப்பட்டாலும் முதற்சுற்றிலேயே தோல்வியடைந்துள்ள Arnaud Montebourge தனது ஆதரவாளர்களை Benoît Hamon க்கு வாக்களிக்கக் கோரியுள்ளார். மனுவல் வால்சுக்கு இதுவரை 1.97 வீத வாக்குகள் பெற்ற Sylvia Pinel மட்டுமே ஆதரவைத் தெரிவித்துள்ளார். இரண்டு மில்லியன் மக்கள் வாக்களித்துள்ளனர். 2011ம் ஆண்டின் முதற்சுற்றில் 2.7 மில்லியன் மக்கள் வாக்களித்திருந்தனர் என்பதும் வலது சாரியக்கட்சியினருக்கான 2017 முதற்சுற்றில் 4,3 மில்லியன் மக்கள் வாக்களித்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

...தொடர்ச்சி 18ம் பக்கம்..

**‘என்ன சொல்லுகிறீர்கள் என்பதைவிட எப்படிச் சொல்லுகிறீர்கள் என்பதில்தான் உங்கள் ஆற்றல் அடங்கியிருக்கிறது’**

நிலா
நிலாவினைப்பெற்றுக்கொள்ள..

சங்கீதா அச்சகம்
39, Bld. de la Chapelle - 75010 PARIS

ரூபி அச்சகம்
10, Rue Labat - 75018 PARIS

CHANGE MAGENTA
77, Bld. de Magenta - 75010 PARIS

ASI BOUCHERIE
195, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

தமிழ்ச்சோலை -பாரிஸ் 17

Gooday
208, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

யாழ் இறைச்சிக்கடை
6, Rue Perdonnet - 75010 PARIS

SACHI EDUCATION
70, rue Philippe de Girard - 75018 PARIS

NRS COIFFURE
5B, Av. Alexis Varagne - 95 Villiers le Bel

ராக ஜோதி மளிகை
C.C Pte de la Ville - 95140 Garges Les Gonesse.

மாயவர் - மொழிபெயர்ப்பு
7, Rue Perdonnet (M°: La Chapelle)

MGR VIDEO
5, Rue Perdonnet - 75010 Paris

தமிழாலயம்
19, Rue Cail, 75010 Paris

மாலா மளிகை
4, Place de Salengro - Garges les Gonesse

அறிவாலயம் புத்தகசாலை
7, Rue Perdonnet (M°: La Chapelle)

Karan Coiffure
203, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

SHAEE CASH & CARRY
193, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

RESTAURANT PARADISE
10, Av. Louis Aragon, Bobigny (M°: Bobigny)

ஞானமணி பல்பொருள் அங்காடி
218, Rue. Anatole Francy - 93 Drancy

அம்பாள் ஸ்ரோஸ்
192, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

தமிழ்ச்சோலை - தமிழ்ச்சங்கம்
Le Blanc Mesnil (93), Clichy (92)

அஷ்டலக்சுமி கோயில்
1, Rue Ledru Rollin - 94600 Choisy le Roi

Sagana Coiffure
64, Rue Louis Blanc (M°: La Chapelle)

சிவன் கோயில்
La Courneuve

ROYAL MAHAL
212, Ave. 8 Mai 1945 - Le Blanc Mesnil

கிருஷ்ணா அச்சகம்
73, Rue Doudeauville - 75018 Paris

தீவக செய்திகளை அறிய..
www.Allaiyoor.com

